Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00


# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:– பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 07 | செவ்வாய்க்கிழமை (22.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 338

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# பிரதமர் பதவியில் திடீர் மாற்றம்
# ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராகப் பதவியேற்பு



(நமது நிருபர்)

**இலங்கை ஜனநாயகக் குடியரசின் 14 ஆவது பிரதமராக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுப் பதவியேற்றார். நேற்றுப் 11.39 மணியளவில் இருந்த சுபநேரத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இந் நிகழ்வு அலரி மாளிகையில் நடை பெற்றது.**

**பிரதமராக டி.எம்.ஜெயரட்ணவை நியமிப்பதென நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.**

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து பிரதமர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. அவ்விடத்தை நிரப்புவதற்காக இலங்கையின் 14 ஆவது பிரதமராக, கடந்த அமைச்சரவையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும், புத்த சாசன அமைச்சராகவும் பதவி வகித்து வந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

1960 ஆம் ஆண்டு அரசியலில் நுழைந்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, (12 ஆம் பக்கம் பார்க்க)

## வட - கிழக்கில் காற்றுடன் கூடிய மழை; வளிமண்டலத் திணைக்களம் அறிவிப்பு

வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ந்து காற்றுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வங்களாவிரிகுடாவில் அதிகரித்துவரும் காற்றமுத்த தாழமுக்கம் காரணமாக வடக்கு, கிழக்கு வடமத்திய, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் காற்றுடன் கூடிய மழைபெய்யுமென்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எஸ். காரியவசம் தெரிவித்துள்ளார்.

புத்தளம்,யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை வரையான வடக்குக்கிழக்குப் பகுதிகளில் கடல் ஓரளவு கொந்தளிப்பு நிலையில் காணப்படும்.

திருகோணமலையிலிருந்து 100 கிலோமீற்றர் தூரம் வரையான கரையோரப்பகுதிகளில் கடும் காற்று வீசக்கூடுமென்றும், இந்த நிலை சில தினங்கள் நீடிக்கக்கூடுமென்றும் வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை 9 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்துக்குள் 979 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக திருநெல்வேலி வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்தில் பெய்துவரும் கடும்மழையினால் தாழ்ந்த நிலப்பரப்புகளில் வாழ்ந்துவரும் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்து குடிசைகளில் வசிக்கும் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவருகின்றனர். (ச–8)

## கடற்படையினருடன் இணைந்து பொலிஸார் நெடுந்தீவில் தேடுதல்
## 7 பேர் கைது

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார். இதனையடுத்து நெடுந்தீவில் நேற்று ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது 7 பேர் கைதுசெய்யப்பட்டு நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். தேடுதல் நடவடிக்கைகளுக்காக ஹெலிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெருமளவான கடற்படையினரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது வட்டுக்கோட்டையில் இருந்து வீடியோப் படம்பிடிக்கச் சென்ற மூவர் உட்பட ஏழுபேர் கைதுசெய்யப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று கடற்படையினர் பொலிஸாருடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சரவை இன்று பதவியேற்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான புதிய அமைச்சரவை இன்று காலை பதவியேற்கவுள்ளது. இந்த அமைச்சரவையில் 25 அமைச்சர்களே உள்ளடக்கப்படுவார்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சு என்பன மகிந்த ராஜபக்ஷவின் பொறுப்பில் இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாருக்கு என்னென்ன அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவிருக்கின்றன என்ற ஊகங்கள் பலமாகப் பரவிவருகின்ற வேளையில் இப்புதிய அமைச்சரவையில் உடனடியாக அங்கம் வகிப்பதில்லையென பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. முடிவெடுத்துள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அச்சம் காரணமாக வடமராட்சி மக்கள் இடம்பெயர்வு

(வல்வெட்டித்துறை)

வடமராட்சி கரையோரப்பகுதி மக்கள் சுனாமி அச்சம் காரணமாக நேற்றிரவு தமது வீடுகளை விட்டு வெளியேறினர்.

தொண்டமானாறு தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

நேற்றுப் பகல் வழமைக்கு மாறாக கடல் கொந்தளிப்பு அதிகமாகக் காணப்பட்டதனால் அவர்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியிருக்குமாறு இராணுவத்தினர் தெரிவித்ததாகவும், இதனால் அச்சமடைந்து தாம் பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்வதாகவும் இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த அவர்கள் உறவினர்களின் வீடுகளிலும், பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை வடமராட்சி கிழக்கில் மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வதிரியான், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொதுக் கட்டடங்களில் தங்கியுள்ளனர்.

அவர்களுக்கான அடிப்படை வசதிகளை கடற்தொழிலாளர் சங்கங்கள் மேற்கொண்டுள்ளன. (ச–23,32,52,8)

## துப்பாக்கி வெடித்ததில் லொறிச்சாரதி காயம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கி வெடித்ததில் லொறி ஒன்றில் பொருட்களை ஏற்றிக்கொண்டிருந்த சாரதி ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த கந்தசாமி தவக்குமார் (வயது 34) என்பவரே காயமடைந்தவராவார்.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியெங்கும் பதற்றநிலை ஏற்பட்டதுடன், கடைகளும் இழுத்து மூடப்பட்டன. (ச–4)

ExpoAir
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2849939,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொய்வு நோயும் அதற்கான பரிகாரங்களும்

***கேள்வி:-** -தொய்வுநோய் (ஆஸ்துமா)என்றால் என்ன?*

**பத்ல்:-** சுவாசப் பாதையிலே குறிப்பாக சுவாசச் சிறுகுழாய்களில் ஒவ்வாமை மாற்றங்களினால் சுவாசப்பாதை சுருங்குவ



தால் சுவாசித்தலுக்கு இடர் ஏற்படும் நிலை.

***கேள்வி:-** தொய்வு நோயின் அறிகுறிகள்*

**பதில்:-** சத்தத்துடனான சுவாசம், இருமல், நெஞ்சு இறுக்கம், மூச்செடுத்தல் கடினம் என்பன இருக்கும்.

***கேள்வி:-**தொய்வு நோய் ஏன் ஏற்படுகின்றது?*

**பதில்:-** உடலில் ஒவ்வாமைத் தாக்கம்,ஈரப்பதன், காலநிலை மாற்றம், தூசுகள், உணவுப் பொருட்கள் ,மருந்துகள் என்பவற்றினால் ஏற்படுகின்றது.

***கேள்வி:-**தொய்வுநோய் பரம்பரையானதா?*

**பதில்:-**தொய்வுநோய்க்கு உரிய ஒவ்வாமை தாக்கம் பரம்பரையலகுகளால் தீர்மானிக்கப்படலாம். ஆனால் பரம்பரையில் நோயில்லாதவர்களும் தொய்வு நோய்க்கு ஆளாகலாம்.

***கேள்வி:-**தொய்வு நோயினை பூரணமாகக் குணப்படுத்தமுடியுமா?*

**பதில்:-**தொய்வு நோயின் தன்மை ஒவ்வொருவருக்கும் வேறுபடும். அது அவர்களின் உடலின் ஒவ்வாமைத் தாக்கத்தின் பரிமாணத்தின் படி ஆகும். சிலருக்கு பூரணமாக குணமடையும. சிலருக்கு தொடர்ந்து மருந்துகள் பாவிப்பதால் நோய் வராது. மேலும் சிலருக்கு தொடர்ந்து மருந்துகள் பாவித்தாலும் நோய் அறிகுறிகள் இருக்கும்.

***கேள்வி:-** -தொய்வு நோய்க்குரிய சிறந்த மருந்து யாது?*

**பதில்:-**சுவாசமூலம் பாவிக்கப்படும் ஸ்ரீரொயிட்டுகள் சிறந்தவை. பெக்கிலமெத்தசோன் பொதுவாகப் பாவிக்கப்படுகின்றது.

***கேள்வி:-** -MDI என்றால் என்ன?*

**பதில்:-**MDI என்றால் Met ered Dose Inhaler. இங்கு மருந்து உயர முக்கத்தில் திரவ நிலையில் இருக்கும். இதனை வாயினூடாக உள்ளெடுத்து சுவாசிக்க வேண்டும்.

***கேள்வி:-** -DPI என்றால் எனன?*

**பதில்:-**Dry Powder Inhaler. உலர்ந்த பவுடர் நிலையில் மருந்து உள்ளெடுக்கப்படும் முறை.

***கேள்வி:-** -தொய்வு நோய் உள்ளவர்கள் எவ்வாறு சாதாரண நிலையை அடையலாம்?*

**பதில்:-**அவர்களுக்கு ஒவ்வாமையான பொருட்களைத் தவிர்ப்பதால் சிலர் சாதாரண நிலைக்கு வருவர். மேலும் சிலர் ஒழுங்காக மருந்துகள் எடுப்பதால் சாதாரண நிலைக்கு வருவர்.

***கேள்வி:-** -தொய்வு நோயாளர் வெண்டோலின் குளிசை பாவிப்பது பற்றி?*

**பதல்:-**வெண்டோலின் குளிசை நோயை மாற்றாது. சுவாசக் குழாயைத் தளர்வடையச் செய்து தற்காலிக சுகத்தினைக் கொடுக்கும். இது காய்ச்சலுக்கு பனடோல் கொடுப்பது போன்றது. எனவே, சுவாசமூலம் உள்ளெடுக்கும் பெக்கிலமெத்தசோனை பாவிப்பதே சிறந்தது.

***கேள்வி:-** தொய்வுநோய் உடையவர்கள் உடற்பயிற்சி செய்யலாமா?*

**பதில்:-**சிலருக்கு உடற் பயிற்சி செய்தால் மூச்செடுத்தல் இன்னும் கடினமாகும். அத்தகையவர்கள் உடற்பயிற்சிக்கு முன் மருந்துகள் எடுக்க வேண்டும்.

***கேள்வி:-**சுவாசமூலம் உள்ளெடுக்கும் மருந்துகளை பாவிக்க பொதுவாகப் பயம் காணப்படுவது ஏன்?*

**பதில்:-**பொதுவாக வெண்டோலின் இன்கேலரினையே தவறாகப் பாவிக்கின்றனர். அத்தகையவர்களுக்கும் ஆபத்தான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இதனால் சுவாசமூலம் உள்ளெடுக்கப் பயப்படுகின்றனர். ஆனால் சரியான மருந்தை தொடர்ச்சியாகப் பாவித்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை. மேலும் சுவாசமூலம் மருந்தினைப் பயன்படுத்தினால் மருந்தில் தங்க நேரிடும் என்ற பயமும் உண்டு. ஆனால் அவ்வாறு இல்லை. நோயின் தன்மை அதிகரிப்பு ஒவ்வாமைத் தாக்கத்திலும், ஈரப் பதனிலும் மனநெருக்கீட்டிலும், நோய்க் கிருமித் தாக்கத்திலும் தங்கியுள்ளது.

***கேள்வி:-**தொய்வு நோய்க்கு யாழ.மாவட்டத்தில் ஆலோசனை பெறக்கூடிய வைத்திய நிபுணர் யார்?*

**பதில்:-**வைத்தியகலாநிதி எஸ்.முகுந்தன் (சுவாச வைத்திய நிபுணர்),வைத்திய கலாநிதி கௌரி செல்வரட்னம்.

**டாக்டர் சீ.யமுனாநந்தா**

***கேள்வி:-**சுவாசமூலம் மருந்து எடுப்பதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?*

**பதில்:-**1.விரைவில் பலன் கிடைக்கும்.

2.பக்கவிளைவு மிக மிகக் குறைவாகவே ஏற்படும். □

## வெள்ளத்தினால் சேதம்

(சரசாலை)

சரசாலைக் கிராமத்தில் தொடர்ச்சியாக பெய்த மழையினால் பெருமளவு வயல் நிலங்கள் வெள்ளத்தினால் சேதமாகியுள்ளன. நாகர்கோயில் வயல்வெளி, நுணுவில் வயல்வெளி,தில்லங் குளவயல்வெளி,மாத்தளாய் கட்டைக்காடு வயல்வெளி,கிராய் வயல் வெளி ஆகியன முற்றாக சேதமாகியுள்ளன. (த)

## பரீட்சை

பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சை தென்மராட்சி அறநெறிப் பாடசாலை மாணவர்கட்கு எதிர்வரும் 26,27ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகள் அறநெறிப் பாடசாலைகளுக்கு வந்துசேர்ந்துள்ளன. (த-9)

## திருட்டு

இருபாலை கிழக்குப் பகுதியில் காணிகளில் உள்ள தென்னை மரங்களில் தினமும் திருடர்களால் தேங்காய் பிடுங்கப்படுவதாகக் காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (த)

# மாணவர்கள் கல்வியால் உயர்ந்து நற்பிரஜைகளாக மிளிர வேண்டும்

(பருத்தித்துறை)

இன்றைய மாணவர்களே"எதிர் காலத்தில் இந் நாட்டை ஆளப போகும் தலைவர்கள்.அவர்கள் கல்வியால் உயர்ந்து நாட்டிற்குகநத நற்பிரஜைகளாகத் திகழ வேண்டும்!

மேற்கண்டவாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பதில் அதிபராகவிருந்து இளைப்பாறிச் செல்லும் என்.குணசீலனுக்கு கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களால நடாத்தப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவிற்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய குணசீலன குறிப்பிட்டார்.கல்லூரியின் பகுதித் தலைவா எஸ்.இராஜஸ்காந்தன் சேவை நலன் பாராட்டு விழாவிறகுத் தலைமை தாங்கினார். குணசீலன் தொடர்ந்து உரையாற்றுகையில குறிப்பிட்டதாவது,

ஆசிரியப்பணி தூய்மையானது. தெய்வீகத்தன்மை கொண்டது. இப் பணியையாற்ற எல்லோருக்கும சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாது. பருததிததுறை ஹாட்லிக் கல்லூரியில் கல்விப் பணியையாற்ற எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நான் பெரும பேறாகவே கருதுகிறேன். பருத்திததுறை ஹாட்லிக் கல்லூரி தனிப் பெருஞ்சிறப்பும் சர்வதேச புகழும பெற்ற சிறந்த கல்லூரியாகும். இக் கல்லூரியில் கல்விகற்ற மாணவர்களுக்குத் தனிமதிப்புண்டு.இக் கல்லூரியில் கல்விப்பணி யாற்றிய ஆத்ம திருப்தியுடன் நான் சேவையிலிருந்து இளைப்பாறுகின்றேன். இக்கல்லூரி எதிர் காலச் சந்ததியினரின் கல்வியின் இலட்சியத்தையடைய தொடர்ந்தும் வழிவகுக்க வேண்டும.

இக் கல்லூரியின் ஒழுங்கு கட்டுப்பாடு,கல்வி மேம்பாடு, விளையாட்டுத் திறமைகள் என்பனவற்றின் வளர்ச்சி குறித்து நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.இக் கல்லூரியின்பழைய மாணவர்கள் பலர் இலங்கையில மட்டு மல்ல உலக ரீதியாகவும் அறிஞர்களாகவும், கல்விமான்களாகவும் திகழ்ந்து வருவது பெருமைக்குரியதாகும். இக் கல்லூரி சிறந்த வளர்ச்சிப் பாதையில் செல்ல அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

பகுதித்தலைவர் த.கலைச் செல்வன,கணித பாட இணைப்பாளர் பீ.ஜெயகோபால் உட்பட ஆசிரியர்களும்,மாணவர்களும் குணசீலனின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினர்.ஆசிரியர்கள் சார்பில் வாழ்த்துப் பாடிய சிவஸ்ரீ தி.சோமஸ்கந்தராஜாக் குருக்கள் அன்பளிப்பும் வழங்கினார். (த-52)

# அக்கரைப்பற்றில் இயல்புநிலையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றுப் பகுதியில் பள்ளிவாசல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 4பேர் உயிரிழந்தமையை அடுத்து எழுந்த பதற்றத்தைத் தணிக்கும முகமாக விசேட கூட்டமொன்று அக்கரைப்பற்று பொலிஸ்நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

கிழக்குப் பிராந்திய பிரதிப்பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.எம்.எம்.தர்மரட்ண தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது கடந்த வெள்ளிக் கிழமை நடாத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 4பேர் கொல்லப்பட்டமையை அடுத்து கடந்த 3தினங்களாக துக்கம் அனுஷ்டிக்கப்படுவதுடன் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதனையடுத்து வழமை நிலையைத் தோற்றுவிக்கும் பொருட்டே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள் ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து பள்ளிவாசல்களின் தலைவர் மௌலவி ஹனிபா தலைமையில் 15 பேரும், தமிழ் மக்கள் சார்பில் அம்பா றை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் தலைமையில 15 பேரும் கலந்துகொண்டனர்.

இன்னும் சில தினங்களுக்குள அம்பாறை மாவட்ட அரசியல்துறையினருக்கும், முஸலிம் பிரதிநிதிகளுக்குமிடையில் சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய் வதாகப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் தெரிவித்தார். (த-8)

# ஆழிப்பேரலை அச்சம் இல்லை — வாழ்விடங்களுக்குத் திரும்பிய மக்கள்

(கொழும்பு)

கொழும்பின் மொறட்டுவ, பாணந்துறை கரையோரப் பகுதி மக்கள் சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகக் கூறி அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர் .

குறிப்பிட்ட பிரதேசங்களில் கடல்நீரின் நிறம் மாறியதையடுத்து இந்த மக்கள் சுனாமி கடல் சீற்றம் ஏறபடலாம் என்ற அச்சம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

எனினும்,சுனாமி ஏற்படக்கூடிய நிலை இல்லையென்பதை அறிந்த இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளதாக மொறட்டுவ மற்றும் பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை காலியிலும் வெலிகமவிலும் சுனாமி கடல் சீற்றம் ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் வெறும் வதந்திகள என வளிமண்டலவியவல் திணைக்களம தெரிவித்துள்ளது.

சுமாத்திரா தீவுப்பகுதியில் நேற்று முன்தினம் காலை நில அதிர்வுகள் இடம்பெற்ற போதும் இலங்கைக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-8)

# இராசி பலன்

22.11.2005

(கார்த்திகை07,செவ்வாய்க்கிழமை)

ஷஷ்டி நண்பகல் 12.09மணிவரை

புனர்பூசம் முற்பகல் 9.47மணிவரை

இராகுகாலம் 3.10-4.40 மணிவரை


சுபநேரம் 10.40-12.10 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | புதியவிடயம், மனச்சஞ்சலம், காரியதாமதம், தெய்வசிந்தை. |
| இடபம் | பிரயாணநன்மை, முயற்சிகைகூடும், சகோதரர் உதவி, அந்நியர் உதவி. |
| மிதுனம் | முயற்சி தாமதம், பணவிரயம், சிந்தனை மிகுதி, மனச்சோர்வு. |
| கடகம் | போசனசுகம், பிரயாணம், தெய்வசிந்தனை, பெரியோர் சந்திப்பு. |
| சிங்கம் | தொழில்நன்மை, வாக்குமேன்மை, இடமாற்றம், நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | முயற்சிகைகூடும், தொழில்வருமானம், பெருமையடைதல், குடும்பமகிழ்ச்சி. |
| துலாம் | அதிகாரம், உற்சாகம், கடினமுயற்சி, நல்ல சிந்தனை. |
| விருச்சிகம் | வீண்பயம், காரியதாமதம், சுபசெலவு, கட்டுப்பாடு. |
| தனுசு | வாகனப்பயம், எதிர்பாராத அச்சம், முயற்சி தடங்கல், உடல்நலக்குறைவு. |
| மகரம் | தொழில் விருத்தி, பெரியோர் சந்திப்பு, உடல் நலம், விருந்துபசாரம். |
| கும்பம் | தொழில் நன்மை, பெரியோர் சந்திப்பு, உடல் நலம், புதியமுயற்சி. |
| மீனம் | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், தொழில் சிந்தை, பணவிரயம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# குன்றனைய மறவர்கள்




அங்கையோடு அங்கை தேய்க்கும்
அடிமையாக வாழ்வதா?
பொங்கிடுவீர்,நாம் எமக்குப்
புதிய பூமி காணுவோம்!
என்றுரைத்த தலைவன் ஆணை
ஏற்றுயிரை நல்கிய
குன்றனைய மறவர் கூட்டப்
பெருமை இன்று பேசுவோம்!
உயிர் நமக்கு வெல்லமா?
அடிமை வாழ்வு சொர்க்கமா?
விடிவுகாண எழுந்தனை
வித்துடல்கள் வீழ்ந்தன!
அன்றும் இன்றும் என்றுமே
நின்று நின்று உலகிலே
நினைவினிலே வாழ்கிறீர்!
என்றும் உங்கள் தியாகத்தை
இவ்வுலகு மறக்குமா?

துரை

# தமிழர் காவலனே!

மார்க்ஸின் இதயமே இலெனின் உதயமே
மாவோ புனிதமே ஹோசிமின் குமுதமே
பூக்கும் எரிமலையே புரட்சி வேங்கையே
காக்கும் புலியே தமிழர் காவலனே வாழி

பு.திலீப்காந்த
(பொறியியலாளர்)

# மீண்டும் வேதாளம் முருங்கைமரம் ஏறுமா?



தன்னை சிங்கள பௌத்த மக்களின் தலைவராக வெளிக்காட்டி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜ பக்ஷ வெற்றியீட்டி ஜனாதிபதியாகப் பதவி யேற்றுள்ளார். ஐம்பதுகளில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தோற்றம் பெற்றிருந்த போது அது என்ன கொள்கையைக் கொண் டிருந்ததோ அதேகொள்கையை மக்கள் முன் நிறுத்தி அவர் பெற்ற வெற்றியானது சிறிலங்காவின் சரித்திரம் சுழன்று தனது பழைய புள்ளிக்கு வந்திருப்பதையே காட்டுகின்றது எனலாம்.

இந்த வெற்றி இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணப்பட முடியுமென றவை- அனைவருக்குமே அதற்கான நம்பிக்கையை சிதைத்துள்ளது.

அடுத்ததாக இந்தத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பெற்ற வெற்றி ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றின் செல்வாக்கை வெளிப்படுத்தி இருப்பது மட்டுமல்ல எதிர்காலத்தில் அவை மேலும் வளர்ச்சியடைய உதவப் போகின்றது.

இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட்டு சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட போது ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் தனித்து விடப்பட் டிருந்தமையே உண்மையாகும். அதாவது அவை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியாதவை. ஏனெனில் ஜே.வி.பியின் மாற்ற முடியாத விரோதியாக ஐ.தே.க உள்ளது. அதே வேளை ரணில் முன்வைத்த சமாதான கோஷம் ஜாதிக ஹெல உறுமயவை ஐ.தே.கவுடன் நெருங்க விடாமல் செய்தி ருந்தது.

இதேவேளை, இரண்டு கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டி யிடுவதாயின் ஒரு சில இலட்சம் வாக்கு களைப் பெற்றுக் கொள்ள முடியுமாயி என்ற விருது மகா சங்கங்களால் வழங் கப்பட்டிருந்தது. அதற்கு மேலும் மெரு கூட்டும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே ரணிலை தோற் கடிக்க முடியும் என்ற நிலைப்பாட்டை அவர் எடுத்தார்.

ரணில் எடுத்திருந்த சமாதான கோஷ நிலைப்பாடு சிறுபான்மை இனத்தவரின் வாக்குகளை அவர் பக்கம் தள்ளிச் சென்றதால் சிங்கள பெரும்பான்மை மக்களின் வாக்குகளை குறிவைத்ததாக மகிந்தவின் பிரச்சாரம் அமைந்தது.

இந்நிலையில் இப்பொழுது அவர் வெற்றி பெற்றுவிட்டார். அவரது வெற்றிக் கான வாக்குகளைத் திரட்டுவதில், ஜே.வி. பியின் பங்கைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ஆரம்ப காலத்தில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியினர் தளம்பல் நிலையில் இருந்தவேளை ஜே.வி.பியினர் ஒழுங்கு செய்த கூட்டங்களிலேயே மக் கள் திரள் கூடியது. நீலக்கொடிகளை விட சிவப்புக் கொடிகளே கூட்ட மைதா னத்தை ஆக்கிரமித்திருந்தன.

அதேவேளை, ஜே.வி.பியானது பெரிய கட்சிகளுடன் ஒப்பிடுகையில் குறைந் தளவு உறு[illegible]பினர்களைக் கொண்டிருந்த



ஆற்றவிருந்தார்.

இந்த உரையில் மகிந்தவுக்கு எதிரான கருத்துக்களை அவர் கூறுவார், அதன் மூலம் ஐ.தே.க தேர்தலில் பயன் பெறமுடியும் எனப் பலரும் எதிர்பார்த்


# நிலை தடுமாறும் இலங்கை அரசியல்

எழுந்திருந்த நம்பிக்கையை - அதாவது சிறிதளவில் இருந்த எதிர்பார்ப்பை பெருமளவுக்கு சிதைத்திருக்கின்றது.

மகிந்த ராஜபக்ஷவுடன் கூட்டுச் சேர்ந் துள்ள அடிப்படைவாதிகளின் செல் வாக்கை வெளிப்படுத்தியிருக்கின்றது. அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சி அடிப்படை வாதிகளின் பிடிக்குள் சென் றிருக்கிறதா? என்ற கேள்வி எழுந்தி ருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் "கட்சியில் பண்டாரநாயக்க குடும்பத்தின் பிடிதளர்ந் திருக்கின்றது. அதாவது பண்டார நாயக் காக்களினால்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிபெற செய்ய முடியுமென சுமார் 50 ஆண்டுகளாக"இருந்த மாயை துடைத்தெறியப்பட்டிருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித் தவர்களும் சரி, வாக்களிக்காதவர்களும் சரி, வெளியே பார்வையாளர்களாக இருந் தவர்களும் சரி மகிந்தராஜபக்ஷ தேர்த லில் வெற்றி பெற்றால் இனப்பிரச்



சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஏற்படாது என்ற அடிப்படையான முடிவைக் கொண்டிருந்தனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கவினால் கூட அவ் வாறு தீர்வைக்கொண்டு வந்து விட முடி யாது என்பதை நன்றே விளங்கிக் கொண்டுள்ளனர். இதற்கு பேச்சுவார்த்தை என்றும் வேறு பல்வேறு வடிவங்களிலும் காலத்தை இழுத்தடித்து தமிழ்மக்களின் போராட்டத்தைப் பலவீனப்படுத்தி சிதை த்து அழித்து விடுவதே ரணிலின் திட்டம்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் போக்கும் அவருடன் இணைந்துள்ள அடிப படை இனவாதிகளின் கூச்சல்களும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூல மான தீர்வு குறித்த நம்பிக்கை மிக அதிகளவில் அற்றுப் போவதற்கு காரண மாக உள்ளன.

அதாவது மகிந்த ராஜபக்ஷ அமைதி வழித்தீர்வு தொடர்பாக தான் எடுக்கப் போகும் நடவடிக்கைகள் குறித்து தெரி வித்துள்ள கருத்துக்கள்- யுத்தநிறுத்த மீளாய்வு, ஒற்றையாட்சித் தீர்வு போன்



னும் ஜனாதிபதிப் பதவியை பெற்றுவிட முடியாது என்பதும் வெளிப்படை. குறைந்த பட்சம் இவ் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடும் மனநிலையிலும் கூட அவை இருக்கவில்லை. இன்றும் கூட மகிந்த ராஜபக்ஷவுடன் அவ் இரு கட்சிக ளும் இணைந்துள்ள போதும் ஒரு கட்சி மீது மறுகட்சி பகைமை உணர்வு கொண்ட தாகவே உள்ளது.

அதாவது தீவிர சிங்கள இனவாதத் திற்கு தலைமை தாங்குவது யார்? என் பதில் ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறு மயவும் ஒன்றுடன் ஒன்று போட்டி போட் டுக் கொண்டிருப்பதால் அவை இரண்டும் இணைந்து செயற்பட முடியாத நிலையி லிருக்கின்றன. அவ்வாறான நிலையில் அவ் இரு கட்சிகளுக்கும் மகிந்தவுடன் இணைந்து கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

அதேவேளை, மகிந்த ராஜபக்ஷவிற்கு கட்சிக்குள்ளிருந்த போட்டி அதிலும் பண் டாரநாயக்க குடும்பத்தால் எழுந்த அழுத் தம் என்பவற்றை வெற்றி கொள்ளவும் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய சமாதான கோஷத்துக்கு போட்டியாகவும் வெளிப் படையான இனவாதத்தை முன்வைக்க வேண்டிய தேவை இருந்தது. இவ்வாறான நிலையில் வெளிப்படையான இனவா தத்தை முன்வைக்காத அதேவேளை தனது தோற்றத்தை சிங்கள பௌத்த காவலன் என்ற வகையில் அமைத்துக் கொள்வதற்காகவே அவர் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பவற்றை தம்முடன் இணைத்துக் கொண்டார்.

உண்மையில் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பன முன்வைத்த சில நிபந் தனைகளை அவர் ஏற்றுக் கொண்டிருக் காது விட்டால்கூட அக் கட்சிகள் அவரு டன் இணைந்திருக்கக் கூடும். ஆனால் அவற்றை அவர் முற்று முழுதாக ஏற்றுக் கொண்டமைக்கு காரணமும் தனது தோற் றத்தை அவ்வாறு பலப்படுத்திக் கொள் ளவே.

அதாவது ஏற்கனவே ராஜபக்ஷ குடும் பத்திற்கு சிங்கள - பௌத்தத்தின் காவ லர்கள் என்ற சாரப்பட 'ரோகண ரஞ்சன'

போதும் சிறந்த கட்டமைப்பைக் கொண்ட தாக உள்ளமையால் அதன் பிரசாரங்க ளும் காத்திரமானதாக இருந்ததாக அவ தானிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, ஜே.வி.பி.க்கு மகிந்த வின் வெற்றி தவிர்க்க முடியாததாக இருந்தது. மகிந்த தோல்வியடைந்தால் ஜே.வி.பியின் தலைவர் முதல் முக்கிய மானவர்கள் சிறையில் இருக்க வேண்டி யிருக்கும். அல்லது நாட்டை விட்டு தப்பி ஓடவேண்டி ஏற்படும் என்ற நிலை கூட இருந்தது.

அத்துடன் மகிந்த தோல்வியடைந் தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிகாவின் கை ஓங்கும். இதனால் ரணில் ஜே.வி.பி மீது நடவடிக்கை ஏதாவது எடுத்தால் கேட்கக்கூட எவரும் இருக்கமாட்டார்கள் என்ற நிலை கூட இருந்தது. இந் நிலையில் ஜே.வி.பியின் பிரசாரம் மிகத் தீவிரமானதாக இருந்தது.

ஆனால் இப்பொழுது மகிந்த வென்று விட்டார். இதனால் ஜே.வி.பியின் செல் வாக்கு அதிகரித்து விட்டது. இதனை ஜே.வி.பி எவ்வாறு பயன்படுத்தப் போகி றது? ஜே.வி.பியின் அடிப்படை தந்தி ரோபாயம் ஐ.தே.கவை அழிப்பதல்ல. சிறி லங்கா "சுதந்திரக் கட்சியை சிறிது சிறி தாக அரித்து தான் வளர்வதே என்ற அசசம் சு.கவினர் மத்தியில் உண்டு. அது தொடருமா?

அதேவேளை, மகிந்த தனது வெற்றிக் காகவே ஜே.வி.பியை அரவணைத்து வைத்துக் கொண்டிருக்கிறார். வெற்றி பெற்றபின் ஜே.வி.பியுடனான ஒப்பந் தத்தையெல்லாம் மதிக்கமாட்டார் என்ற பிரசாரம் சிறுபான்மையினர் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது அது நடக்குமா?

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பண்டாரநாயக்க குடும்பத்திற்கு இருந்த பிடி தளர்ந்துள்ளமை இந்தத் தேர்தல் மூலம் நடந்திருக்கின்றது. அதாவது இத் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவும், அநுரா பண்டாரநாயக்கவும் எடுத்திருந்த நிலைப்பாடு மகிந்தவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க் கப்பட்டதற்கு மாறாக அவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விடவில்லை என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டு கின்றன.

பண்டாரநாயக்க குடும்பத்தின் பரம் பரை மாவட்டமாகிய கம்பஹாவிலேயே மகிந்தவால் வெற்றி கொள்ள முடிந்தி ருக்கிறது.

சிலவேளைகளில் பண்டாரநாயக்க குடும்பத்தின் தீவிர ஆதரவாளர்கள் மகிந் தவுக்கு ஆதரவாக செயற்படாது போயி ருந்தாலும் அவர் ஜனாதிபதியாகி விட்ட நிலையில் பண்டாரநாயக்க குடும்பத்தின் செல்வாக்கு தளர்ந்துவிட்டதாகவே கொள்ளமுடியும்.

சந்திரிகா குமாரதுங்க கடந்த 15 ஆம் திகதி பிரியாவிடை உரை ஒன்றை

தனர். ஆனால் போட்டி மிகவும் பலமாக இருப்பதாக தேசிய புலனாய்வுப் பணிய கத்தினர் சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்கிய இரகசிய தகவல் காரணமாக அவர் பிரியாவிடை உரையையே கை விட்டுவிட்டார்.

இன்றும் கூட சு.கவின் தலைமைப் பதவி ஜனாதிபதி சந்திரிகாவிடம் உள் ளது. ஆனால் இது தொடர்ந்தும் அவ



-இணையப்பார்வை

ரிடம் இருக்குமா? அநுராவுக்கு என்ன நடக்கப் போகிறது? என்பதெல்லாம் கேள் விகளாக உள்ளன. எனினும் உடனடி யாக அவர்கள் எல்லாம் தூக்கி வீசப் பட்டு விடுவார்கள் என்று கூறிவிட முடியா விட்டாலும் படிப்படியாக ஓரங்கட்டப்பட்டு விடவும் முடியும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மகிந்தராஜபக்ஷ மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பல இருக்கின்றன. அவர் சிங்கள பௌத்த வேடத்துடன் மட்டுமல்ல கிராமமக்களின் தோழனாகவும் வேடம் புனைந்திருந்தமையும் அவரது வெற்றிக்கு ஒரு காரணமென கூறப்படுகிறது. அதனை எவ்வாறு செயலில் காட்டப் போகிறார்? என்பது மிக முக்கியமான ஒரு விடய மாகும். □

## ஆறுமுக நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

சைவத்தின் காவலரும் வசன நடை தந்த கைவல்லாளர் எனப் போற்றப்படு பவருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 126வது குருபூசையும், கூட்டுப்பிரார்த்தனை யும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பகல் 1.00 மணிக்கு நாவலர் மகா வித்தி யாலயத்தில் நடைபெறும். அன்றைய தினம் நாவலர் கோயிலில் விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும். (த)

## நினைவாலயத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நினைவாலயத் திறப்பு விழா யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலைய ரங்கு முன்பாக நாளை மறுதினம் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (த-7)

## இன்று ஒரு தகவல்

# இராசிபலன்

ஒருவர் வேகமாக வந்தார் . அவசரமாக பத்திரிகை வாங்கினார். அதைவிட அவசரமாக அங்கேயே நின்று கொண்டு புரட்டினார். ஒரு நிமிடம் எதனையோ ஆர்வமாகப் பார்த்தார் . அதன்பின் நிதானமாகப் பத்திரிகையை மடித்து வைத்துக்கொண்டு அவசரமில்லாமல் நடந்து போனார். அவரிடம் மெதுவாகப் போய் "அப்படி ஆர்வமாக என்ன சார் பார்த்தீகள்?" என்று கேட்டேன்."கடையில் பத்திரிகை வாங்கியவுடன் முதல் காரியமாக அதைப் பார்த்து விடுவேன்" என்றார்.

"எதை?" என்று கேட்டேன். "அதுதான் சார் இராசிபலன்,... அதைப் பார்த்தால் தான் எனக்கு எல்லாமே சரியாக ஓடும்" என்றார். அது சரி சார் ... இராசிபலனில் என்ன போட்டிருக்கிறதோ அதன் பிரகாரம் அன்றைக்கு சரியாக நடக்கிறதா?" என்று கேட்டேன். "நடக்கிறதா...இல்லையா...? என்றெல்லாம் சரி பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன் சார் . காலையில் அதைப் பார்க்க வேண்டும் .அதில் ஒரு ஆவல் ... அவ்வளவு தான் " என்றார்.

கிட்டதட்ட எல்லோருமே இதுபோல் ஒரு ஆர்வத்தில் தான அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் . இராசிபலன் பார்க்கும் பழக்கம் தமிழர்களிடம் மிக அதிகமாக இருக்கின்றது என்கிறார் ஒரு பேராசிரியர். இராசிபலன் போடாமல் வரும் நாளிதழ்கள் இங்கே மிகவும் குறைவு. அது போட்டால் தான் அதிகமாக விற்பனையாகிறது. அதனால் அதில நம்பிக்கை இல்லாதவர்கள் கூட அதைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மிகவும் வேடிக்கை மெட்ராஸில் பத்திரிகை வாங்கி தன்னுடைய இராசிபலனைப் பார்த்துவிட்டு அதிர்ஷ்டலாபச் சீட்டு வாங்குபவர்களும் உண்டு . இந்தியாவில் அச்சாகும் மொத்த அதிஷ்டலாபச் சீட்டில் 70 சதவீதம் தமிழ்நாட்டில் தான் விற்பனையாகிறதாம் சார்.

வான் மண்டலம் - பூமண்டலத்தைப் பாதிப்பது உண்மை தான . அதை அறிவியல் பூர்வமாகச் சிந்திக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இன்று நண்பரால் பணவரவு என்று இராசிபலன் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.நமது நண்பன் இன்று பணம் கொண்டு வந்து கொடுக்கிறான் என்பது ஆகாயத்தில் உள்ள நட்சத்திரத்திற்கு எப்படி சார் தெரியும்? அதுவுமில்லாமல் இங்கே உள்ள நண்பர்கள் எந்தக் காலத்தில் சார் பணம் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். நண்பர்களுக்குப் பக்கத்திலே இருக்கும் நம்மாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை. எங்கேயோ இருக்கும் நட்சத்திரத்திற்கு என்ன தெரியும்.

ஒரு காலத்தில் நாம் வாழும் இந்தப் பூமி ஒரே இடத்தில் நிலையாக நிற்கிறது என்றும்... சூரியனும் சந்திரனும் பூமியைச் சுற்றி வருகிறது என்றும் நம்பிக்கொண்டிருந்தோம். அந்தக் காலத்தில் உருவான இராசிபலன் கொள்கையை சூரியனைச் சுற்றித்தான் பூமி வருகிறது என்று தெரிந்து கொண்ட இந்தக் காலத்திலும் நம்பிக் கொண்டிருப்பது மிகவும் விநோதம்தான். இந்த இராசிபலன் பார்க்கும் பழக்கம் நமது ஊக்கத்தை இழக்கச் செய்யக்கூடிய ஒரு பழக்கம்.அதைவிட்டு விடுங்கள் .

இப்போது உதாரணத்திற்கு நாமே ஒரு சோதனை செய்து பார்ப்போமே! ஒரே நாளில் வந்த தினசரிப் பத்திரிகைகள் சிலவற்றை எடுத்துக்கொள்வோம். அதில் ஒரே இராசிக்கு ஒவ்வொரு பத்திரிகையிலும் என்ன பலன் போட்டிருக்கிறது என்று பார்க்கலாமா? எனது நண்பரின் ரிஷபராசிக்கு ஒவ்வொரு பத்திரிகையிலும் என்ன பலன் என்று பார்த்தோம் . ஒரு பத்திரிகையில் 'செலவும் சிரமமும்' என்று போட்டிருந்தது (தினமலர் 26.2.93).இன்னொரு பத்திரிகையில் சுலபமாக நன்மை என்று போட்டிருந்தது (தினமணி 26.2.93).இதில் எதை சார் நம்புவது? நீங்களும் ஒருநாள் இதைச் சோதித்துப் பாருங்கள்.அதன் பின்பு இந்தப் பழக்கத்தை விட்டுவிடுவீர்கள்.

என்னுடைய நண்பர் ஒருவரும் நானும் ஒருநாள் கடையில் பத்திரிகை வாங்கினோம். நண்பர் இராசிபலன்களில் நம்பிக்கையற்றவர் . இருந்தாலும் பத்திரிகை வாங்கியவுடன் "உங்கள் இராசி என்னவென்று சொல்லுங்கள்... பலன் என்ன வென்று பார்க்கலாம்" என்றேன்.

அவர் சிரித்துக் கொண்டே அதெல்லாம் பொய் அதை ஏன் பார்த்தீகள்?' என்றார். சும்மா சொல்லுங்கள் என்றேன. என் இராசி தனுசு --அதில் பணவரவு என்று போட்டிருக்கும் என்றார். நான் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனேன் பணவரவு என்றுதான் போட்டிருந்தது . அது எப்படி சார்... பார்க்காமலே சரியாகச் சொன்னீர்கள்?. என்று கேட்டேன் .

அவர் மெதுவாக என் அருகில் வந்து அந்தப் பத்திரிகைக்கு தினமும் இராசிபலன் எழுதித் கொடுப்பதே நான் தான் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சிங்கள மக்கள் போரை விரும்புகிறார்கள் இதையே தேர்தல் முடிவு எடுத்துக்காட்டுகிறது

## ஐ.தே.க பிரதிப் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் போரை விரும்புகிறார்கள். சமாதானத்தை விரும்பவில்லை என்பதையே நடைபெற்று முடிந்த தேர்தல் எடுத்துக்காட்டுகிறது என்று ஐ.தே.கவின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநயக்கா தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கூறுகையில்,

மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடனும்,ஹெல உறுமயவுடனும் உடன்பாடு செய்துகொண்டு தான் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யப் போவதாக அறிவித்திருந்தார். இதன்பின்னர் மீண்டும் யுத்த சூழ்நிலை ஏற்படுவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் . இந்நிலையில் பின்னர் ஏற்படக் கூடியவற்றை நன்றாக உணர்ந்தறிந்து கொண்டே மக்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர்.

ஐ.தே.க 2002ஆம் ஆண்டிலிருந்து குண்டுகள் வெடிக்காத சோதனைச்சாவடிகள் இல்லாத நிலைமையை ஏற்படுத்தியிருந்தது என்பதை நினைவூட்டிய அத்தநாயக்க, ஐ.தே.க ஆதரவாளர்களின் பெயர்கள் திட்டமிட்டமுறையில் வாக்காளர் டாப்பில் இருந்து அகற்றப்பட்டிருந்தன.அந்த வாக்காளர்களுக்கு அது பற்றி முன்கூட்டியே தெரியாமல் இருந்ததால் மாற்று நடவடிக்கைகள் எடுக்கமுடியாமல் போனது என்று கூறினார்.

இதேவேளை, பெல்லன்வில விமலரத்ன தேரர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

ரணில்விக்கிரமசிங்க வெற்றிபெற நேர்ந்தால் சர்வதேசத்தின் அழுத்தம் தம் மீது பிரயோகிக்கப்படும் என்று கருதிய விடுதலைப் புலிகள் தேர்தலைப் பகிஷ்கரிப்பு செய்யும்படி தமிழ் மக்களை தூண்டினர்.ரணில் விக்கிரமசிங்கவைப் போலன்றி மஹிந்த ராஜபக்ஷவினால் பெருமளவு சர்வதேச ஆதரவைப் பெறவோ அதன்மூலம் தம்மை ஆயுதங்களை கைவிடச் செய்து சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்ற வைக்கக்கூடிய அழுத்தத்தை ஏற்படுத்தவோ முடியாது என்பதே புலிகளின் நம்பிக்கையாக இருக்கிறது என்று தெரிவித்துள்ளார். (அ-6)

# மாணவர்கள் ஆங்கில அறிவை பெற்றுக்கொள்வது அவசியம்

## -பேராசிரியர் என்.சண்முகலிங்கன்

(காரைநகர்)

கணனிப் பயிற்சி நெறியானது தட்டச்சுக்கான கற்கை நெறியல்ல.அதனுடன் தகவல் தொழில் நுட்பத்தினையும் திறமையுடன் கற்க முன்வரல் வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் காரைநகரில் தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற C.T.Cயின் கணனிப்பயிற்சி நிலையத்தின் 2ஆம் வருட பூர்த்தி விழாவிலும் சான்றிதழ் வழங்கும் நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காரைநகர் கணனிப்பயிற்சி நிலைய நிர்வாகி கோ.சிறிவரதனின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பேராசிரியர் சண்முகலிங்கன் தொடர்ந்து உரையாற்றும்போது,

பொதுவாகக் கூடுதலான மாணவர்கள் கணனியை தட்டசசு இயந்திரமாகவே பயன்படுத்தி வருகின்றனர். அதனை விடுத்து நவீன தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி வினைத்திறன் மிக்க மாணவர்களாகத் திகழவேண்டும். இதன்மூலம் எமது சமுதாயமே பாரிய அறிவியல் பரிணாமம் பெற்றதாக மாற்றமடையும்.

இன்றைய சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் தலைமுறை வித்தியாசம் இல்லாமல் பலரும் சான்றிதழ் பெற்றுச் சென்றதையிட்டு எனது மனம் மகிழ்வடைகின்றது. காரைநகர் தரைத்தோற்றத்திலும் புவியியல் ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும் மற்றும் கலை கலாசார நிலைகளிலும் தனித்துவமான பண்பினையும் சிறப்பினையும் உடையது. இன்று கணனிப்பயிற்சி நிலையத்தினூடாக பலரும் கணனிப்பயிற்சியை நிறைவு செய்துள்ளதால் காரைநகர் கிராமமும் உயர்ச்சி பெற்றுள்ளது எனலாம்.இதற்குக் காரைநகர் கணனிப்பயிற்சி நிலையம் பாரிய தொண்டாற்றியுள்ளது.

தற்காலத்தில் உலகம் சுருங்கிவிட்டது எனலாம். அனைத்துச் செயற்பாடுகளும் சர்வதேச வலைப் பின்னலிற்குள் உட்பட்டு வருகின்றது. அதனை அறிந்து கொள்வதற்கு மாணவர்கள் அனைவரும் ஆங்கில அறிவையும் பெற்றுக்கொள்வது அவசியமாகும் எனவும் தெரிவித்தார்.

நிகழ்வின் போது பரீட்சையில் திறமையாக சித்தியடைந்த மாணவர்கள் மூவருக்கு தங்கப் பதக்கமும், மூவருக்கு கணனிகளும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (த-246)

# மாணவர்களின் திறன்களை அதிகரிக்கும் அபாகஸ் பயிற்சி

(பருத்தித்துறை)

குழந்தைகளிடம் புதைந்து கிடக்கும் அறிவாற்றல்களை வெளிப்படுத்த 'அபாகஸ்' பயிற்சிநெறிகள் வழிவகுக்கின்றன. மாணவர்களின் விவேகத் திறன்,நுண்ணறிவாற்றல், தொழிற்படுதிறனையும் அதிகரிக்க இப்பயிற்சி நெறி பயிற்சிகளை வழங்குகின்றது.

மேற்கண்டவாறு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் உலக சிப் அக்கடமியின் 'அபாகஸ்" பயிற்சிநெறி ஆரம்பவிழாவிற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய வித்தியாலய அதிபர் இ.இராகவன் குறிப்பிட்டார்.

இப்பயிற்சி நெறியை வடமராட்சி வலய கரவெட்டிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். அம்பலவாணர் ஆரம்பித்துவைத்தார். இவ் வைபவத்திலே பிரபல தொழிலதிபர் வீ.எஸ்.பொன்னம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அதிபர் இராகவன் தொர்டர்ந்து உரையாற்றுகையில் ,

5வயது முதல் 13 வயது வரையான மாணவர்கள் இப் பயிற்சிநெறி மூலம் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

சீனா, மலேசியா, இந்தோ னேஷியா, தாய்லாந்து,இந்தியா ஆகிய நாடுகளில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றி காணப் பட்டுள்ளது. இந் நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு ஒரே பாடத்திட்டமே பின்பற்றப்படுகிறது.

இளமைக்காலம் முதலே குழந்தைகள் போட்டிகளை எதிர்கொள்வதற்குப் பயிற்சியைப் பெற்றுக் கொள்கின்றனர். மனக்கணித மூலம் விடை காண குழந்தைகள் நிபுணத்துவப்படுத்தப்படுகின்றனர். இத்திட்டம் குழந்தைகளைத் துரிதமாகவும், துல்லியமாகவும் எழுதவும் பயிற்சிகளை வழங்குகின்றது.

இப் பயிற்சிகளை வழங்குவதற்கான ஆசிரியைகள் கொழும்பிற்குஅனுப்பப்பட்டு விசேட பயிற்சிகள் பெற்றுவந்துள்ளனர். இப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கான மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டுளளனர் . இம் மாணவர்களுக்கு இப் பயிற்சிகளைத் திறமையாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பயிற்சிகளை இப்பகுதி மாணவர்களும் சிறப்பாகப் பெற்று அறிவு ஆற்றல்களை மேம்படுத்தி சாதனைகள் புரிந்து வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும்.இதனைக் கருத்திற்கொண்டே நாம் செயற்படடு வருகின்றோம். இப் பயிற்சிகளை பெற்றுக்கொள்ள மாணவர்களும் முன்வர வேண்டும். பெற்றோர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார். (த-52)

# பொய்யான உறுதிமொழிகளை வழங்கியது ஐ.ம.சு.முன்னணி

## -திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னர் வரவு-செலவுத்திட்டமொன்று சமர்ப்பித்து மக்களுக்கு பொய்யான உறுதிமொழிகளை ஐக்கிய . மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வழங்கியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் மஹிந்தவின் நோக்கு என்ற தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக எதிர்வரும் ஜனவரி 1ஆம் திகதி முதல் இந்த வரவு-செலவுத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்.

எனினும் தற்போது மஹிந்தவின் நோக்கை உள்ளடக்கிய புதிய வரவு-செலவுத்திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படுமென்று கூறப்படுகிறது.

இதன்மூலம் தேர்தலுக்கு முன்னர் வரவு-செலவுத் திட்டமொன்றை சமர்ப்பித்து மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகள் அனைத்தும் பொய்யானவை என்று தெரிய வந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-9)







# ஊடகங்களும் சமாதானமும்

உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானதாக உணரப்பட்டுள்ளது. பல நாடுகளில் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுவதற்கு ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானதாக அமைந்திருக்கிறது.

வியட்னாம் யுத்த காலத்தில் வியட்னாமில் அமெரிக்க படையினரின் செயற்பாட்டை அமெரிக்க ஊடகங்கள் அம்பலப்படுத்திய காரணத்தால் அமெரிக்க மக்கள் கொதித்தெழுந்தார்கள். பல எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றன. இதன் விளைவாக அமெரிக்கப்படை வியட்னாமிலிருந்து வாபஸ் பெற நேர்ந்தது. இதுபோல பல சம்பவங்களை கூற முடியும்.

அண்மையில் கூட ஈராக்கில் அமெரிக்க படையினர் சிறைக்கைதிகள் மீது நிகழ்த்திய கொடூரத்தை பிரிட்டன் அமெரிக்க ஊடகங்கள் வெளிப்படுத்திய காரணத்தால் அமெரிக்க நிர்வாகம், சம்பந்தப்பட்ட படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது.

இவ்வாறு ஊடகங்கள் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த விடயங்களை, அடக்கு முறைகளை பாரபட்சமில்லாமல் வெளிப்படுத்த வேண்டியது கடமையாகும். ஆனால் எமது நாட்டில் பாதிக்கப்படுகின்ற தமிழ் பேசும் மக்கள் குறித்த விடயங்களை தமிழ் ஊடகங்கள் மட்டுமே வெளிக்கொண்டு வருகின்றன. ஆனால் இது குறித்து சிங்கள, ஆங்கில ஊடகங்கள் முற்றாக தடைப்போக்கை கடைப்பிடிப்பதையே காணக்கூடியதாக உள்ளது.

தமிழ் ஊடகங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு சார்பான செய்திகளையும், சிங்கள ஆங்கில ஊடகங்கள் பெரும்பான்மை இனத்தவரின் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. இதன்மூலம் இலங்கை ஊடகத்துறை தமிழ், சிங்களம் என் இரு தரப்பாக பிளவுபட்டுள்ளதை வெளிப்படையாகவே காணக்கூடியதாக உள்ளது.

இதன் பலனாக கடந்த காலங்களில் இடம்பெற்ற கொடிய போரின் காரணமாக பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் சமூகங்கள் குறித்து சிங்கள ஆங்கிலப்பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுவதை தவிர்த்துக் கொண்டன. படையி-னரின் வெறியாட்டத்தினால் பலியான மக்கள் பற்றியும், யுத்தத்தினால் அழிக்கப்பட்ட சொத்துக்கள் பற்றியும், பறிக்கப்பட்ட உரிமைகள் பற்றியும் இவை கண்டும் காணாமலிருந்தன.

அதேபோல வடகிழக்கிலும், வெளியிலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளுக்கும், அடக்கு முறைகளுக்கும் வக்காளத்து வாங்கிய இந்த ஊடகங்கள் அவற்றை நியாயப்படுத்தின. தமிழர்களை பயங்கரவாதிகளாக சித்தரித்தன. தமிழ் மக்கள் குண்டுதாரிகள் அவர்களுக்கு புகலிடமளிக்கக்கூடாது என்ற வகையில் செய்திகளை வெளியிட்டன. தமிழ் மக்களுக்கு வாடகைக்கு வீடுகளை வழங்குவதைக்கூட ஆபத்தான செயலாக வர்ணித்து விளம்பரங்களை வெளியிட்டன. அதேபோல தெற்கின் பல பாதிப்புக்களுக்கு தமிழ் பேசும் சமூகத்தினரே காரணமென சுட்டிக்காட்டின.

இதன் விளைவாக சிங்கள மக்களிடையே தமிழ் பேசும் சமூகத்தினருக்கு எதிரான உணர்வலைகள் ஏற்பட்டன. அவர்களின் மனங்களில் தமிழருக்கு எதிரான விம்பத்தை கட்டியெழுப்பின. இதன் மூலம் நாட்டின் ஒரு சமூகத்தினர் இன்னுமொரு சமூகத்தினரை வெறுப்புடன் பார்க்கின்ற நிலையை ஏற்படுத்தினர்.

இதற்கு மேலாக வடகிழக்கில் இடம்பெற்ற போர் குறித்த செய்திகளை திரித்து வெளியிட்டனர். புலிகளின் தாக்குதல்களை பயங்கரவாத தாக்குதல்களாகவும், படையினரின் செயற்பாடுகளை வீரம் செறிந்த செயற்பாடுகளாகவும் வர்ணித்து செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டன. கைது செய்யப்படுகின்ற அப்பாவி மக்களையும், கொல்லப்படுகின்ற அப்பாவி மக்களையும் புலிகளாக சித்தரித்தன. புலிகள் முழு நாட்டையும் கைப்பற்றுவதை தடுப்பதற்கு, அவர்கள் சிங்கள மக்களை அழிப்பதை தடுப்பதற்கு யுத்தம் அவசியமானதென நியாயப்படுத்தின.

ஆனால் இத்தகைய செயற்பாடுகளால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை, இழப்புக்களை முழு உலகமும் நன்கு உணர்ந்துள்ளது. இந்த நாட்டின் வறுமைக்கும், பின்னடைவுக்கும் யுத்தமே காரணம் என்பதை சகலரும் உணர்ந்துள்ளனர். ஆனால் இந்த ஊடகங்கள் அதனை இன்றுவரை உணர்ந்து கொண்டதாக காட்டிக்கொள்ளவில்லை.

மாறாக இன்றும்கூட இனவாத செயற்பாட்டுடன் செய்திகளை திரித்து வெளியிடுகின்றன. குறிப்பாக வடகிழக்கு சம்பவங்களை தமக்கேற்றால் போல இட்டுக்கட்டி வெளியிடுகின்றன. இதன் காரண-மாக சமாதானம் ஒன்றை நாட்டில் ஏற்படுத்துவதற்கு சில ஊடகங்கள் தடையாக இருக்கின்றதாகவே பலரும் எண்ணத்தலைப்பட்டுள்ளனர்.

– என். ஜீவேந்திரன்

இதன் பின்னணியில் சில இனவாத அரசியல் கட்சிகளும், முதலாளிகளும் இருக்கின்றனர். அதேபோல ஊடகத்துறை குறித்தும் ஊடக தர்மங்கள் குறித்தும் அறிவற்ற ஊடகவியலாளர்களின் குறைந்த அறிவு மட்டமும் இந்த பிரச்சனைக்கு காரணமாக அமைகின்றது. மேலும் சிங்கள ஊடகங்கள் அளவில் இல்லாவிட்டாலும் தமிழ் ஊடகங்களிலும் பக்கச்சார்பான விடயங்கள் உள்ளதை மறுக்க முடியாது.

எனவே இனியாவது இந்த ஊடகங்கள் நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, அதற்கு பிரதான தேவையான சமாதானத்திற்கு ஆதரவாக செயற்பட முன்வருவதே இன்றைய தேவையாக உள்ளது.

---

மக்கள் சமாதான முன்னனி இலங்கையில் இனங்களுக்கிடையில் சகோதாரத்துவத்தை வளர்ப்பதை பிரதான நோக்கமாக கொண்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்திவரும் அமைப்பாகும். இலங்கையின் பல பிரதேசங்களை உள்ளடக்கி சிங்கள தமிழ் முஸ்லிம் இளைஞர், யுவதிகளுக்கு நிரந்தர சமாதானம் தொடர்பான பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை இது நடத்துகின்றது. நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் பங்குகொண்ட அத்தகைய ஒரு நிகழ்ச்சி சில தினங்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் விழிப்பின் பதிவுகள் குறித்தும் அது சமாதான நடைமுறைகளுக்கும், இனப் புரிந்துணர்விற்கும் வழங்கிவரும் முக்கிய இடம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. யங் ஏசியா டெலிவிஷனின் ஊடகவியலாளர்களால் உருவாக்கப்படும் விழிப்பின் பதிவுகள், சதி சடஹன் போன்றசமாதான பக்கங்கள் நவமணி, வலம்புரி, உதயன் போன்ற தமிழ் பத்திரிகைகளிலும், ராவய எனும் சிங்கள வார இதழிலும் வாரந்தோறும்



வெளி வருக்கின்றன. மேலுள்ள படத்தில் மக்கள் சமாதான முன்னனியின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் மில்டன் ஏ. பெரேரா சதி சடஹன் பக்கமொன்றை காட்டி உரையாடுவதை காணலாம்.

---

# சிதைந்து வரும் தமிழர் கலாசாரம்

கலாசாரம் ஒரு சமூகத்தின் அடையாளம். சில வேளைகளில் வரலாற்று பதிவாகவும் அமைகிறது. வரலாறுகளை அடையாளப்படுத்துவதும் கலாசாரம். கலாசார அழிவு ஒரு சமூகத்தின் அழிவுக்கு நிகரானது.

தமிழர்களுக்கென்று பரம்பரை பரம்பரையாக வழி வந்த தனித்துவமான கலாசாரம் காணப்படுகின்றது. இந்த கலாசாரத்தை பின்பற்றி சிறந்த முறையில் வாழ்ந்து வந்த இலங்கைத்தமிழ் மக்களின் சமூக வாழ்வை நாட்டில் ஏற்பட்ட யுத்தமானது சின்னாபின்னமாக்கிவிட்டது. யுத்தமென்பது வெறுமனே உயிர்களை மட்டுமல்ல குறித்த ஒரு சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணிவிடுகின்றது.

அந்த வகையில் தாம் பிறந்த மண்ணை விட்டு, உறவுகளை விட்டு, உடமைகளை இழந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பிற தேசங்களில் வாழும்போது அங்கு தமது கலாசாரங்களை விருத்தி செய்வதென்பது கடினமான காரியமாகும்.

இந்நிலையிலேயே அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலே யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர் தமிழர்கள் ஓரளவு இயல்பு நிலைக்கு வந்தனர். அதனூடாக ஏனைய மக்களுடன் பழகி அவர்களின் கலை, கலாசாரங்களை அறிந்ததுடன், தமது கலாசாரங்களை மீள கடைப்பிடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது என்றே கூறலாம். அதுவரை இந்த சூழலை ஒரு சில தமிழ் கலாசார நிறுவனங்கள் பயன்படுத்திக் கொண்டன. தமிழர் கலாசாரத்தை விருத்தி செய்வதில் ஆர்வம் இருந்தாலும் கலாசார வளர்ச்சிக்கு உதவுவதில் பல பின் நிற்கின்றன. அத்தோடு போர்ச்சூழலை விடவும் யுத்த நிறுத்த காலத்தில் கொழும்பில் தமிழர் கலாசாரம் பாதிக்கப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. சினிமா கலாசாரம், மேற்கத்தேய நாகரிகம் போன்றன கொழும்பிற்கு இடம்பெயர்ந்த தமிழர்களை ஆட்டிப்படைக்கின்றன. அதிலும் குறிப்பாக எதிர்கால சந்ததியான இளைஞர் சமுதாயம் இவற்றுக்கு பலியாவதே வேதனைக்குரிய விடயமாகும். இவற்றுக்கு சிறுவர்களும் விதிவிலக்கல்ல.



அகதி வாழ்க்கையை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்கள் அதே வேளை புலம்பெயர்ந்த நாட்டின் கலாசார பண்பாடுகளை பேண வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றனர். பிற நாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் அவ்வாறு என்றால் கொழும்பிற்கு இடம்பெயர்ந்த தமிழர்களின் நிலையோ அதைவிட மோசம். அன்னிய கலாசார மோகத்தில் திளைக்கும் இவர்களில் சிலர் தமிழ் கலாசாரங்களை சிறிது சிறிதாக மறந்து வருகின்றனர். இதற்கு அவர்களை மட்டும் குறை கூறிப்பயனில்லை. ஏனெனில் இடம்பெயர்ந்து அன்னிய பிரதேசங்களில்

> நாட்டின் கலாசாரங்களை அழியவிட்டு விட்டு வெறும் மண்ணை நேசிப்பது மட்டுமே தேசபக்தி என்று பலர் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். தேசமென்பது வெறும் மண் மட்டுமல்ல மண்ணும், அதன் கலாசாரங்களும் சேர்ந்ததே...

அதுமட்டுமல்ல அகதி முகாம்களில் வாழும் தமிழ் மக்கள் அந்த துயரமான வாழ்க்கைக்கு மத்தியில் எவ்வாறு தமது கலாசாரத்தை பற்றி சிந்திக்க முடியும் என்ற கேள்வி எழாமலில்லை.

மேலும் தமிழர்களுக்கு தமது கலாசாரத்தை பின்பற்ற வேண்டும் என்ற ஆர்வம் இருப்பினும் ஆங்காங்கே இடம்பெற்று வரும் சந்தேகத்தின் பேரிலான கைதுகள், ஆட்கடத்தல்கள் என்பன அவற்றுக்கு தடைகளாக உள்ளன.

– எஸ். கிருபாலினி

இது ஒருபுறமிருக்க ஒரு சமூகத்தை யுத்தத்தின் மூலம் வெற்றி கொள்ள முடியாவிட்டால் அந்த சமூகத்தின் கலாசாரங்களை அழிக்கும் பட்சத்தில் அந்த சமூகம் அழிந்து விடும் என்ற வியூகத்தில் இன்றைய அரசியல் காய் நகர்த்தல்களும் நடைபெறுவதாக தமிழ் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். எனவே இவற்றுக்கெல்லாம் இடம் கொடுக்காது தத்தமது கலாசாரங்களை பாதுகாக்க வேண்டியது அச்சமூகத்தை சேர்ந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி அதன் கலாசாரத்தில் பெருமளவில் தங்கியுள்ளதால் அதனை பேணிப்பாதுகாத்து வருவது முக்கியமானதாகும். எவ்வாறு ஏனைய அரசியல் விடயங்களில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோமோ அதேபோல எமது கலாசாரத்திலும், பண்பாடுகளிலும் நாம் கவனம் செலுத்தி, அதன் இயல்புகளுக்கு பங்கம் ஏற்படாதவாறு அதனை வளர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

---

## இவ்வார விழிப்பில்...

- யுத்த நிறுத்தமும் சமூக மேம்பாடும்
- அனல்மின் நிலையத்தை எதிர்க்கும் மூவினத்தினர்
- வரலாற்றில் சமாதான நடைமுறைகள்
- மீளிணக்கமும் அயர்லாந்து அனுபவங்களும்

---

## இன்னும் நான் தேடுகிறேன் எங்கள் கிராமம் எங்கே?

என் வீட்டுக்கு செல்ல
பிரதான வீதியிலிருந்து
பிரிந்து செல்லும்
அந்த மணல் வீதி எங்கே?

புழுதி கிளப்பும் வண்டில்களையும்
மின்னலா் ஓடும் சிறுவர்களையும்
சுமந்து நீண்டு வளைந்த
அந்த மணல் வீதி எங்கே?

வேலிகளுக்குள் எட்டிப்பார்க்கும்
தென்னைகளையும்
கிளிகள் கூடு கட்டியிருந்த
பனைகளையும்
பரத்தியிருந்த ஊரின்
குறுக்காய் நீண்ட
அந்த வீதி எங்கே?

வீதி
வீதிகளாய் பெருகி
வீதிகளிடையே வீடுகள் விரிந்து
பிள்ளையார் கோயில் மணியுடன்
துயில் எழும்
எங்கள் கிராமம் எங்கே?

மேய்ச்சலுக்கு செல்லும்
மாடுகளின் குழம்பொலியும்
பள்ளிக்கு செல்லும்
பிள்ளைகளின் சிரிப்பொலியும்
கோயிலில் இருந்து வரும்
குமரிகளின் சிணுங்கல் ஒலியும்
எல்லாம் நிறைந்து
இன்பமாய் இருந்த
எங்கள் கிராமம் எங்கே?

நினைவுகளால் படர்ந்து
நிகழ்வுகளால் நிறைந்து
உறவுகளுடன் மகிழ்ந்திருந்த
என் வாழ்வுக்கு சாட்சியான
என் வீட்டை
ஏந்திக்கொண்டிருந்த
எங்கள் கிராமம் எங்கே?

முள்ளுக்கம்பிகளுக்குள்
காவல் அரண்களுக்குள்
மறைந்து போனதாம்
எங்கள் கிராமம்

முரட்டு சப்பாத்துகளால்
முன் நீட்டிய துப்பாக்கிகளால்
இராட்சத வாகனங்களால்
இருண்டு போனதாம்
எங்கள் கிராமம்

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்
ஒளித்து வைத்தனராம்
எங்கள் கிராமத்தை

அவர்களின் பாதுகாப்புக்காக
எவரும் வரக்கூடாதாம்

எங்கள் கிராமத்து மண்ணை மிதிக்க
எங்கள் வீதியயில் நடக்க
என் வீட்டு திண்ணையில் அமர
என் வீட்டில் படுத்துறங்க
எனக்கு அனுமதி இல்லை

அவர்கள் பறித்து கொண்ட போதும்
நாங்கள் இழந்து விட்ட போதும்
இன்னும் நான் தேடுகிறேன்
எங்கள் கிராமம் எங்கே?

– என். ஜீவேந்திரன்

---

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) – சிற்றம்பலம் கணேசன்

மாவீரர் தினத்தை முன்னிட்டு

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடாத்திய கவிதைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டியோரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

1ஆம் இடம்- வ.யோகானந்தசிவம், வட்டு.வடக்கு, வட்டுக்கோட்டை. 2ஆம் இடம்- நல்லை அமிழ்தன், 54 - புதிய செம்மணி வீதி, யாழ்ப்பாணம். 3ஆம் இடம்- தம்பிராசா பரமலிங்கம், மூலபாரதி நாவலடி, ஒழுங்கை வண்ணார், வடக்கு.

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர் விபரம் வருமாறு**

யோ. யூட் நிமலன், காந்தருபன் அறிவுச் சோலை. திருமதி மாலாதேவி மதிவதனன், மங்குளியன் வளவு, அளவெட்டி. இசைமதி, இல.89,உருத்திரபுரம், கிளிநொச்சி. பிரபாஜினி, மட்டுவில், கிழக்கு சாவகச்சேரி. செ.பரமநாதன், மானிப்பாய் வீதி, தாவடி. வேல்மகன், நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு. வி.ஜெயபால், வைத்தீஸ்வராக் கல்லூரி. கா.சுயந்தன், பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி. பூ.ஜெயமலர், வக்ரோரியாக் கல்லூரி. ப.யாழவள், பழம் வீதி, கந்தர்மடம்.

இவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு உயர் கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. (த)

## பதவியேற்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் எஸ். இராமசாமி 35 வருட அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். அதனையடுத்து எஸ்.சந்திரயோகன் பதில் நிர்வாக உத்தியோகத்தராகப் பதவி ஏற்றுள்ளார். (த-52)

## நிதி ஒதுக்கீடு

(பொன்னாலை)

யாழ்.கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையத்திற்கு கட்டடப் புனரமைப்புக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிதியினை யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஒதுக்கீடு செய்து வழங்கியிருப்பதாக சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (த-49)

# கனடாவில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு



மாவீரர்களின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினரைக் கௌரவிக்கும் நிகழ்வு கனடாவின் ரொரன்ரோவில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வினை மாவீரர் மேஜர் நரேனின் தயார் திருமதி ஸ்ரீ சத்தியவதி நல்லைநாதன் பொதுச்சுடரினை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து கனேடியத் தேசியக் கொடியேற்றல், தமிழீழத் தேசியக் கொடியேற்றல், அக வணக்கம், ஈகைச்சுடர் ஏற்றல், மலர் வணக்கம் செலுத்தப்பட்டதுடன் உறுதிமொழியும் எடுக்கப்பட்டது.

இந்நிகழ்வின் ஒருங்கமைப்பாளர் நடராசா வரவேற்புரை வழங்கினார். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவீரர்களின் பெற்றோர் சகோதரர்களால் தங்களது உறவுகள் பற்றிய நினைவுரைகள் ஆற்றப்பட்டன. தொடர்ந்து உலகத் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த கண்ணன் உரையாற்றினார்.

தொடர்ந்து மாவீரர் பெற்றோர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (த)

# இந்திய மீனவர்கள் விடுவிப்பு

இலங்கையின் சிறையிலிருந்து இரு தமிழ் நாட்டு மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டின் இராமேஸ்வரத்தைச் சோந்த பி.முத்துமணி (வயது-33) ஆர் முனிராஜ் (வயது - 38) ஆகிய இருவர் ஏப்ரல் 15 ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடித்ததாக சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதையடுத்து இருவரது உறவினர்களும் மீனவர்களை விடுவிக்கக் கோரி இந்தியத் தூதரகத்தில் முறைப்பாடு செய்தனர். இதையடுத்து இரு மீனவர்களையும் விடுவிக்க இந்தியத் தூதரகம் நடவடிக்கை எடுத்து விடுதலை செய்தது.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னை விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மீனவர்களை தமிழ் நாடு மீன் வள அமைச்சு அதிகாரிகள் வரவேற்று சொந்த ஊருக்கு தொடரூந்து மூலம் அனுப்பி வைத்தனர். (த)

# நிரந்தர வீடுகள் கையளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் மாவீரர் தினத்தையொட்டி இலங்கை மெதடிஸ்த திருச்சபையால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட 35 நிரந்தர வீடுகள் நாளையதினம் உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை திக்கத்தில் இலங்கை மெதடிஸ்த திருச்சபை டயகோனி நிறுவனத்தின் உதவியுடன் இந் நிரந்தர வீடுகளை சுனாமியால் பாதிக்கப்பட்ட பொலிகண்டி மக்களுக்கு நிர்மாணித்துள்ளது. இவ் வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணியையும் திருச்சபையே கொள்வனவு செய்திருந்தது.

இவ் விழாவிலே இலங்கை மெதடிஸ்த திருச்சபை வடக்கு- கிழக்கு மறைமாவட்டத் தலைவர் வண எஸ்.ஏ.கதிரவேற்பிள்ளை அடிகளார், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வரதீஸ்வரன், டயகோனி நிறுவன இலங்கைப் பணிப்பாளர் டானியல் தம்பிராசா, மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குழு அருட்திரு டி.அழகராசா அடிகளார், மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறைப் போதகர் அருட்திரு.சதீஸ் அடிகளார் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். (த-52)

# சான்றிதழ் வழங்கும் விழா

(பருத்தித்துறை)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை சுனாமியால் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு நடாத்திய தொழிற் பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் விழா எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மெதடிஸ்த திருச்சபையின் நேசகம தொழிற் பயிற்சி நிலையத்தில் மெதடிஸ்த திருச்சபைப் போதகர் அருட்திரு. எஸ்.சதீஸ் அடிகளார் தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளது. தையல், தட்டச்சு பயிற்சிகள் பெற்ற 50 பேர் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை வடக்கு கிழக்கு மாகாண மறை மாவட்டத் தலைவர் வண.எஸ்.ஏ.கதிரேச பிள்ளை அடிகளா பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட்திரு டி.அழகராசா அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர். (த-52)

# சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க ராஜதந்திரிகள் தீவிர முயற்சி

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதைத் தொடர்ந்து, அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும இடையிலான சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதறகுத் தேவையான முயற்சிகளில் மேற்குலக ராஜதந்திரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கிழக்கில் அதிகரித்து வரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகள் மீள ஆரம்பிக்கவேண்டுமென டோக்கியோ நிதி உதவி மாநாட்டில் இணைத் தலைமை வகித்த அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், யப்பான் என்பன கருதுகின்றன.

குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷவும் அவரது அரசியல் கூட்டணியினரும் நோர்வேக்கு எதிராக பகிரங்கமாக முன்வைத்து வரும் விமர்சனங்களை நிறுத்திக் கொள்ளவேண்டுமென ராஜதந்திரிகள் விரும்புகின்றனர். இத்தகைய விமர்சனங்கள் தொடருமாயின் தொடர்ந்தும சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராக செயற்படமுடியாது என நோர்வே தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரது கூட்டணியினரும் தேர்தலின் போது அரசியல் லாபங்களுக்காகவே நோர்வேயை விமர்சித்து வந்தனர்.

தற்போது தேர்தல் முடிவடைந்திருப்பதால் நோர்வேக்கு எதிரான பரபரப்புக்கள் கைவிடப்படுமென தாம் நம்புவதாக மேற்குலக ராஜதந்தரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு இதுவே தக்க தருணம் எனக் கருதும் மேற்குலக ராஜதந்திரிகள், தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் புதிய அரசியல் விடுதலைப் புலிகள் நம்பிக்கை வைக்கும் விதத்தில் புதிய ஜனாதிபதி செயற்பட வேண்டும் எனவும் மேற்கு நாடுகள் விரும்புவதாகவும் அந்த ராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த)

# விண்ணப்பம் கோரல்

தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்கு 2006 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் திறன் அபிவிருத்தி தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப கல்வியமைச்சின் கீழ் இயங்கி வரும் தொழில்நுட்ப பயிற்சித்திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்குமாறு தொழில்நுட்ப கல்வித்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ எம்..எஸ் விஜியக் கோன் தெரிவித்தார்.

பகுதிநேர மற்றும் முழுநேர பயிற்சி நெறிகளாக தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

உள பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தகமையுடைய மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

முழுநேர கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்படும் சகல மாணவர்களுக்கும் மாதாந்தம் 450 ரூபா வீதம் விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. மேலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சோந்த 600 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா மாதம் உதவித் தொகையாக வழங்கப்படவுள்ளதாக தொழில்நுட்ப கல்விப் பயிற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-9)

## பரீட்சை

(பொன்னாலை)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் அலகின் பொதுக் கலைமாணித் தேர்வுப் பகுதி - II 2002, சிறப்புக்கலைமாணித தேர்வுப் பகுதி II 2002 ஆகிய பரீட்சைகள் இம்மாதம் 28ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் இம்மாதம் 23 ஆம் திகதியிலிருந்து வெளிவாரிப் பட்டப்படிப்பு பிரிவுகள் பரீட்சை அலகில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-49)

## சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் தீட்சை வழங்கல் வைபவம சிறப்புற நடைபெற்றது.

நாட்டுப் பிரச்சினை காரணமாக சில வருடங்கள் நடைபெறாதிருந்த சமயதீட்சை இவ்வருடம் முதல் இனிமேல் வருடா வருடம் நடைபெறுமென பாடசாலை அதிபர் வ.ஆறுமுகம் தெரிவித்தார். சமய தீட்சை நிகழ்வில் பாடசாலை மாணவ மாணவிகளும் சுற்றாடல் வாழ்.மக்களுமாக சுமார 34 பேர் சமய தீட்சை பெற்றனர்.

இந்நிகழ்வில் சமய தீட்சையின் அவசியம் பற்றி அகில இலங்கை சைவன் நற்பணி மன்றத்தின் செயலாளர் இராசையா நாகேந்திரராஜா உரையாற்றினார்.(அ-109)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2005

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2005

**கணிதம்** நேரம் : 1 மணித்தியாலம்

**பகுதி - I**

ஆசிரியர்: தி.திலீபன்
என்.சி.ஏ.கல்வி நிலையம், இணுவில்.

01.சுருக்குக: 29 + 2.9

02.ஒரு மாம்பழம் 17 ரூபாப்படி 3 பழங்கள் வாங்கும் ஒருவர் ரூ.60 ஐ கொடுத்தால் மிகுதிப் பணம் யாது?

03.பெறுமானம் காண்க. $50^{1/2} \times \sqrt{2}$

04.சுருக்குக: $\left(\frac{3}{4}+\frac{2}{5}\right) \div \left(\frac{3}{5}+\frac{3}{10}\right)$

05.பல்கோணி ஒன்றின் அகக் கோணமானது புறக்கோணத்தின் 5 மடங்கு எனின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?


06.சுருக்குக: $\frac{(-2) \times (-3) \times (-4)}{(-12)}$

07.செவ்வகமொன்றின் நீளத்திற்கும் அகலத்திற்கும் இடையான விகிதம் 4:1ஆகும். அதன் சுற்றளவு 30cm எனின் நீளம் யாது?

08.காரணி பற்றிய அறிவைக் கொண்டு சுருக்குக: $\sqrt{48 \times 52 + 4}$

09. $T = k\sqrt{l/g}$ எனும் சமன்பாட்டில் l ஐ எழுவாயக மாற்றுக?

10.தொடை A யின் தெடைப்பிரிவு B என்பதை தொடைக் குறியீட்டில் தருக?


11. 

x இன் பெறுமானம் யாது?

12. $101_{இரண்டு}$ எனும் எண்ணை அடி பத்தில் எழுதுக?

13. ரூ.900 ற்கு வாங்கிய பொருளை ரூ 920 ற்கு விற்றால் இலாப சதவீதம் யாது?

14. 2, 5, 8 எனும் தொடரியில் $15^{ம்}$ உறுப்பு யாது?

15. 

O ல் இருந்து A இன் திசைகோள் யாது?


16. $Y = 2x+3$ எனும் நேர்கோட்டிற்கு செங்குத்தான நேர்கோட்டின் படித்திறன் யாது?

17. $X = -3, \quad Y = -2$ எனின் $\frac{3Y-2x}{Y}$ ன் பெறுமானம் யாது?

18.20 பயணிகள் உள்ள பேரூந்தில் 15 பேர் பெண்கள் எனின் பயணிகளில் ஒருவர் ஆணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

19.ஐந்து எண்களின் ஆகாரம் 3. இடை 12, இடையம் 8 ஆகும். ஒரு எண் 7 எனின் மற்றைய எண் யாது?


20.நிலையான புள்ளி ஒன்றின் மாறாத் தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுங்கு யாது?

21. 

இவ் உருவில் X இன் பெறுமானம் யாது?

22. 0.45 ஐ எளிய பின்னமாக எழுதுக?

23. புகையிரதம் ஒன்று 15 நிமிடத்தில் 18km தூரம் செல்கின்றது. கதியை $ms^{-1}$ இல் தருக?

24. 

X இன் பெறுமானம் யாது?

25. $\sqrt{3} = 1.73$ எனின் $\sqrt{75}$ பெறுமானம் யாது?

26. $a^2 + 4a$ எனும் கோவையை நிறை வர்க்கமாக்க சேர்க்கப்பட வேண்டிய எண் யாது?

27. $X = \sqrt{5}$ எனின் $X^2 - 2$ ன் பெறுமானம் யாது?

28. 2:3 = 6: X எனின் X ன் பெறுமானம் யாது?

29.8 மனிதர்கள் 9 நாட்களில் செய்யும் வேலையின் 1/3 பங்கை 6 மனிதர்கள் எத்தனை நாளில் முடிப்பர்?

30. சதுரமொன்றின் இயல்புகள் 3 தருக?

*(30 புள்ளிகள்)*

## க.பொ.த (சா/ த) பரீட்சை

**கர்நாடக சங்கீதம்** **பகுதி - I இன் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01.4 | 02.4 | 03.3 | 04.3 | 05.2 |
| 06.2 | 07.1 | 08.3 | 09.1 | 10.1 |
| 11.3 | 12.2 | 13.1 | 14.1 | 15.1 |
| 16.1 | 17.1 | 18.3 | 19.2 | 20.1 |
| 21.1 | 22.2 | 23.1 | 24.3 | 25.1 |
| 26.2 | 27.3 | 28.2 | 29.3 | 30.3 |
| 31.3 | 32.4 | 33.4 | 34.1 | 35.3 |
| 36.4 | 37.1 | 38.2 | 39.3 | 40.4 |

**க.பொ.த (சா/ த) மாணவர்களே!**
**உங்கள் வலம்புரியில் தொடர்ந்தும் பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.**

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு அப்துல்கலாம் வாழ்த்து

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் வாழ்த்து அனுப்பியுள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள தங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். முற்காலங்களைப் போல் தங்களது ஆட்சிக்காலத்திலும் இரு நாடுகளிடையேயான இரு தரப்பு உறவுகள் வலுப்படும் என்று உறுதியாக நம்புகிறோம்.

இந்தச் சூழலில் இலங்கையில் அமைதியும் இணக்கமும் தங்களது தலைமையின் கீழ் உருவாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளது.

அதில், ஸ்ரீலங்கா முகம் கொடுத்த சவால்களுக்கு நாம் முழு ஆதரவளிப்போம் எனறும் வடக்கு கிழக்கு மக்கள் வாக்களிப்பது தடுக்கப்பட்டுள்ளது குறித்து அதிருப்தி அடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# போலி நாணயத்தாள் அச்சிட்டோர் கைது

(தங்கொட்டுவ)

சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போலி நாணயத்தாளகள் அச்சிடும் மையமொன்றை தங்கொட்டுவ பொலிஸார் கண்டு பிடித்துள்ளார்கள்.

தங்கொட்டுவ கோணாவள பிரதேசத்திலிருககும் வீடொன்றில் இந்த மையம் இயங்கி வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 257 போலி 500 ரூபா நாணகத்தாள்களும், அந்த நாணயத்தாள்களை அச்சிடப்பயன்படுத்தப்பட்ட கணனி இயந்திரமும கைப்பற்றப்பட்டதோடு நால்வர் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். (த-9)

# விசாரணை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்த்தகர் சாள்ஸ் ஞானக்கோனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை குற்றப் புலனாய்வுத்துறையினர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இதற்கமைய அவசரகால சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாள்ஸ் ஞானக்கோனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை குறித்த அறிக்கைகள் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் சமர்பிககப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# பனை நடுகை

(பொன்னாலை)

ஊர்காவற்றுறை பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது சங்க எல்லைக்குட்பட்ட பகுதியில் பனம் விதைகளை நடுகை செய்யவிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகையில், தம்பாட்டி மற்றும் கரம்பொன் பகுதிகளில் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன.

மேற்படி பகுதிகளில் சுமார் 5,000 பனம் விதைகள் நடுகை செய்யப்படவிருப்பதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-49)

# கல்வித் தொழில்நுட்பத்தில் நவீன சாதனங்கள்

உளவியல் வளர்ச்சியின் விளைவாக கல்விச் செயல் முறை மிகவும் சிக்கலான அமைப்பைக் கொண்டதாக மாறியுள்ளது. கற்றல் கற்பித்தல் செயல் முறையை பல காரணிகள் கட்டுப்படுத்துகின்றன. இவற்றினூடாக கற்றல் கற்பித்தல் செயன முறையை இலகுவாக்க புதிய கற்பித்தல் உத்திகள், முறைகள், வசதிகள் ஆகியன தேவை. இவற்றை நிறைவு செய்தலில் கல்வித் தொழில்நுட்பம் முதலிடம் வகிக்கின்றது.

கல்வியில் புரட்சி நிலைகள் நான்கு என **EvicAshby** குறிப்பிடுகின்றார். முதலாவது நிலை பள்ளிக்கூடங்கள் அல்லது பாடசாலைகள் அமைக்கப்பட்டமையாகும். இரண்டாவது நிலை வாய்மொழியுடன் எழுதலும், வகுப்பறையில் இடம்பெற்றமையாகும். மூன்றாம் நிலை அச்சுப் கலையின் தோற்றத்துடன் ஆரம்பமாகி பாடநூல்கள் அச்சிடகப்பட்டமையாகும். நானகாம் நிலை இலத்திரனியலின் வியத்தகு வளர்ச்சியூடாக அமைந்த கல்வித் தொழில்நுட்பமாகும்.

பாடசாலை அமைப்பு முறை இன்றைய சமூகத்தின் கல்வித் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யமுடியாதுள்ளது. இதன் பயனாக இன்று முறைசாராக் கல்வி முறை, தொலைக கல்வி முறை என்பன பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளன. இத்தகைய முறைசாராக் கல்வி, தொலைக்கவ்வி முறைகள் சிறந்த முறையில் வினைத் திறனைக் கொடுப்பதற்கு வானொலி, தொலைக்காட்சி, புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி, மேந தலை எறியி போன்ற விஞ்ஞான தொழில்நுட்பக் கருவிகள் மிகவும் உதவி புரிகின்றன. இதற்கு கல்வித் தொழில் நுடபம் அவசியமாகின்றது.

கல்வியின் நோக்கங்களை எய்த உதவும் நுண்துறைகள் இவற்றின் இயல்புகள், துணைக் கருவிகள் போன்றவற்றினூடாக கல்வித் தொழில் நுட்பம் என்பது விளக்கப்படுகின்றது.

பொதுவாக கல்வித் தொழில் நுட்பம் எனக் கூறும் போது கற்பித்தலை கவர்ச்சியும், பயனும் மிக்கதாக ஆக்குவதில் இன்று ஆசிரியருக்கு கிடைத்துள்ள பலதரப்பட்ட துணைச் சாதனங்கள் **(Teaching aids)** இவற்றுடன் இணைந்த பொருட்கள் ஆகியவற்றைக் குறிப்பாகவே நாம் கொள்கின்றோம்.

கல்வித் தொழில் நுட்பம் பல புதிய கருவிகளை ஆசிரியருக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றைப் பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்.

1.வானொலி - **Radio**
2.தொலைக்காட்சி - **Television**
3.புகைப்படப்பிரதி இயந்திரம் - **Photocopy Machine**
4.புகைப்பட எறியி - **Slide projector**
5.மேந்தலை எறியி - **O.H.P**
6.பல்லூடக எறியி - **Multi media projector**
7.கணனி - **computer**
9.**Visual presenter**

இவற்றுள் அண்மைக் காலத்தல் அதிகளவில் கல்வித் துறையில் பயன்படுத்தப்படுபவை **O.H.P, Multimedia projector, Visual presenter** என்பனவாகும் என்றால் மிகையாகாது.

## மேந்தலை எறியி (Over Head Projector)

மேந்தலை எறியியானது இயந்திரம் ஒன்றும் அதனுடன் சேர்ந்த திரை ஒன்றுடனும இணைநத ஓர் அமைப்பாகும்.

இவ் எறியி மூலம் அட்டவணை, படஙகள், தேசப்படங்கள், குறிப்புகள் என்பவற்றை திரையில் (அல்லது சுவரில்) விழுத்த முடியும். இதனை வகுப்பறையில் மாணவருக்கு முன்பாக வைத்து திரையில் தேவையான விடயத்தை விழுத்துவதன் மூலம ஆசிரியர் கற்றல் கற்பித்தலுக்கு பயன்படுத்த முடியும்.

இவ்வட்டவணைகள், படங்கள், குறிப்புக்கள் என்பவற்றை தயாரிப்பதற்கு **Transparency** எனப்படும் ஒருவகைத் தாள் பயன படுத்தப்படுகிறது. இத்தாளில் குறித்த விடயத்தை புகைப்படப பிரதி எடுத்தோ அல்லது **O.H.P Marker** எனப்படும் பேனையால எழுதியோ பயன்படுத்த முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன மூலம் கற்றல், கற்பித்தலை உயிர்பபுள்ளதாக அமைத்துக் கொள்ள முடியும். ஆசிரியர் பயன்படுத்தும் தாள் சிறிதாக இருப்பினும் திரையில் பெரிய விமபம் விழுவதால் வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும் பார்க்கக்கூடியதாக இருகதகும்.

ஆசிரியர் மாணவரை நேருக்கு நேரே பார்த்துக் கொண்டே படங்களை, அட்டவணைகளை திரையில் காட்ட முடியும். படங்களில் அட்டவணைகளில் கவனிக்கப் பட வேண்டிய விடயங்களை யும் தனியாக குறித்துக் காட்ட முடியும். சாதாரண வகுப்பறையிலேயே கற்பித்தலை மேற்கொள்ளமுடியும். படங்களை முழுமையாக அல்லது பகுதி பகுதியாகக் காட்ட முடியும்.

இக்கருவி நிறை குறைவாக இருப்பதால் எளிதாக தூக்கிச் செல்ல முடியும். இக்கருவி பயன்படுத்துவதன் மூலம் ஆசிரியர் படத்தையோ, அட்டவணையையோ கரும்பலகையில் வரைவதற்கு எடுக்கும் நேரத்தை மீதப்படுத்த முடியும்.

இக்கருவி அனைத்து ஆசிரியர்களாலும் அனைத்துப் பாடங்களுக்கும் பயன்படுத்த முடியும்.

## பல் ஊடக எறியி (Multi media presenter)

கணனியின் பயன்பாடு கல்வித துறையில் அதிகளவில் இடம்பிடித்த பின்பு **(Multi-media presenter)** பல்லூடக எறியி இன்று பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது கட்புல செவிப்புல சாதனமாக இருப்பது இதன் அதிக பயன்பாட்டுக்கு காரணம் என்றால் மிகையாகாது.

இக் கருவியை கணனியுடனும் அல்லது வீடியோ டெக்குடனும் **(videoDeck)** இணைதது பயன்படுத்த முடியும். மற்றும் படங்கள் அட்டவணைகள், தேசப் படங்கள் **O.H.P** இல் எறியக் கூடிய அனைத்தும் பல்லூடக எறியியால் திரையில் எறியப் பட முடியும்.

இக்கருவியும் ஓர் திரையும், இயந்திரமும் சேர்ந்த ஓர் அமைப்பாகும். வகுப்பறையில் மாணவர்கள் முன்பாக இதனை வைத்து சுவரில் அல்லது திரையில் விம்பத்தை விழுத்த முடியும். அததுடன் ஒலியையும் இங்கு கேட்க முடியும்.

அனைத்துப் பாடங்களுக்கும எல்லா ஆசிரியர்களாலும இதனைப் பயன்படுத்த முடியும். முன்கூட்டியே கணனியில் அல்லது வீடியோ கமரா மூலம் பாடத்தைத் தயார் செய்து வகுப்பறையில் பயன்படுத்த முடியும்.

சிறிய கருவியாகையால் இலகுவில் தூக்கிச் செல்லக் கூடியது. மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய வகையில பாடங்களைத் தயார் செய்து பயன்படுத்தும் போது மாணவர் ஈடுபாட்டுடன் கற்றலில் ஈடுபடுவர்.

## Visual presenter

மிக மிக அண்மைக் காலதில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட கருவி **Visual presenter, O.H.P, Multi media** என்பவற்றை விட கையாள்வதற்கு இலகுவானது.

இதனை தனியாகப் பயன்படுத்த முடியாது. பல்லூடக எறியயுடன் இணைத்தே பயன்படுத்த முடியும். இக்கருவியின் **Main stage** எனப்படும் தட்டின் மீது நாம் எறிய விரும்பும் படத்தை அட்டவணையை அல்லது பௌதிகப் பொருளை வைத்தால் நேரே மேலே உள்ள கமரா அதனைப படம்பிடித்து பல்லூடக எறியி ஊடாக திரையில் விழுத்தும்.

இதிலுள்ள சிறப்பம்சம் யாதெனில் இக்கருவியால் மிகச் சிறிய பொருட்கள், படங்கள் என்பவற்றை பல்லூடக எறியி மூலம் எறிய முடியும். அத்துடன கணனியுடன் இணைத்தும் இதனைப் பயன்படுத்த முடியும்.

இக்கருவி பல்வேறு வசதிகளைக் கொண்டதாக நவீனமயப் படுத்தப்பட்டு தற்போது கிடைக்கக்கூடியதாக உள்ளன.

இதன் குறைபாடாகக் கூறுவதாயின் இக் கருவி மிகவும் விலையுயர்ந்ததாக உள்ளமையைக் கூறலாம்.

ஆசிரியர்கள் இக்கருவிகளை பாடசாலைகளில் பயன்படுத்தி கறறல் கற்பித்தலை வினைத் திறனுடையதாக மாற்றி மாணவர்கள் பயன்பெற உதவ வேணடும்.

**திரு.க.கமலநாதன்**
**உபபீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி.**

# மஹிந்த – சந்திரிகா சந்திப்பு

(கொழும்பு)





நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

சந்திரிகா விரும்பிய காலம் வரை ஜனாதிபதி மாளிகையில் தங்கி இருக்கலாம் எனவும் அதுவரை தாம் அலரி மாளிகையில் தங்கி இருக்கப் போவதாகவும் இச்சந்திப்பின் போது மகிந்த தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

ஆனால, சந்திரிகா அடுத்த சில வாரங்களுக்குள் ஜனாதிபதி மாளிகையை விட்டு சென்று விடுவார் என நம்பகரமாகத் தெரியவருகிறது. (த)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

## கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட சிற்றுண்டிச்சாலையின் சமையலறை மெருகூட்டலும் அருகிலுள்ள ஈருருளி தரிப்பிடம் பழுதுபார்த்தலுக்குமான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கட்டிட நிர்மாண வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் M 8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத் தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து யாழ்ப் பாணப் பல்கலைக்கழக சிறிய கேள்விகள் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் நிர்வாகம் அவர்களிடமிருந்து 02.12.2005 வரை செல்லுபடியான ஒப்பந்தக்காரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.**

**1. மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 15000/=**
**2. மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 500/=**

**பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் சீல் பண்ணப்பட்டு வேலையின் பெயரை உறையின் இடது மூலையிற் குறிப்பிட்டு தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.**

**பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 12.12.2005 அனறு மாலை 3.00மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக அன்று மாலை 3.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப் பத்திரங்கள் திறக்கும் பொழுது பிரசன்னமாயிருக்க முடியும்.**

**தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் வழமையான அலுவலக நேரங களில் கட்டணம் ஏதுமின்றிக் கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.**

**தபால் பெட்டி இல 57,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**
**16.11.2005**

**பதிவாளர்**
**யாழ.பல்கலைக்கழகம்.**

(C-1835)

# மஹிந்தவின் சிந்தனையின் அடிப்படையில்

# புதிய வ.செ.திட்டம் அமைவது அவசியம்

(கொழும்பு)

மஹிந்தவின் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்டம் ஒன்றை சமர்ப்பிப்பதே புதிதாக நியமிக்கப் படவுள்ள அமைச்சரவையின் பொறுப்பு என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் றஞ்சித் சியாம் பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த புதிய அமைச்சரவை இன்று செவ்வாய்க்கிழமை புதிய ஜனாதிபதி மஹிந்தவால் நியமிக்கபடவுள்ளது. இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலும் மஹிந்தவின் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் சில உள்ளடக்கப்பட்டு இருப்பதாகவும் மேலும் பல விடயங்களை உள்ளடக்கும் பொருட்டே புதிய வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப் படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

செயற்திறன் மிக்க திட்டங்களும் மிகவும் சிறந்த மானியங்கள் கொண்ட புதிய ஆலோசனைகளும் இதில் உள்ளடக்கப்படவுள்ளது.

இன்று அமைக்கப்படவுள்ள அமைச்சரவையில் அமைச்சரவையின் பிரதான பொறுப்பாக அமைந்துள்ள வரவு செலவுத் திட்ட யோசனை தயாரிக்கப்படுமென்றும் இதில் எவ்வித சட்ட சிக்கலும் இல்லையென்றும் கூறினார். (த-8)

# கையளிப்பு வைபவம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை உத்தியோகபூர்வமாக தமது பதவியைப் புதிய ஜனாதிபதியிடம் கையளிக்கும் வைபவம் இடம்பெறவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அன்றைய நிகழ்வின் போது முன்னாள் ஜனாதிபதி தனது ஜனாதிபதிக் காலத்தில் மேற்கொண்ட கடமைகள் குறித்த விபரமான அறிக்கையொன்றை ஜனாதிபதி மஹிநதவிடம் கையளிப்பார் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# விளக்கமறியல்

(கொழும்பு)

கடந்த 17ஆம் திகதி மீட்டியாகொடையில் இடம்பெற்ற மூன்று படுகொலைகள் தொடர்பாக கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பலிபிட்டிய நீதிமன்ற பதில் நீதவான் டி.எஸ்.குணவர்த்தன முன்னிலையில் 6 சந்தேக நபர்களும் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (த-8)

# அவதார தினவிழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 80 ஆவது அவதார தின விழா நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (த-9)

# பெங்களூர் தோல்வியை சென்னையில் சரிசெய்வோம்

## தென்னாபிரிக்காவின் பயிற்சியாளர்

சென்னையில் இன்று நடைபெறும் 3 ஆவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா அணி வீரர்கள் நன்றாக விளையாடி பெங்களூர் தோல்வியை சரி செய்வாகள் என்று நம்புகின்றேன் என பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இங்கு 5 ஒரு நாள் போட்டிகளின தொடரில் விளையாடுகிறது. இதன் முதல் ஒருநாள் போட்டி ஹைதராபாத்தில் நடைபெற்றபோது அதில் தெனனாபிரிக்கா வெற்றிபெற்றது. பெங்களூரில் நடைபெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியல் இந்திய அணி வெற்றி பெற்று 1-1 என்ற வெற்றி சமநிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் 3ஆவது ஒருநாள் போட்டி சென்னையில் இன்று நடைபெறுகிறது. இதில் விளையாடுவதற்காக கிரீம் ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்க அணியும், ராகுல் ட்ராவிட் தலைமையிலான இந்திய அணியும் நேற்றுமுன்தினம சென்னை வந்து சேர்ந்தன.

தென்னாபிரிக்க அணி வீரர்கள் போட்டி நடைபெறும் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நேற்றுமுன்தினம் பயிற்சியில் ஈடுபட்டனர். சுமார் 2 மணி நேரம் உடற்பயிற்சி, கால் பந்து பயிற்சி ஆகியவற்றில் ஈடுபட்டு விட்டு மீண்டும் விடுதிக்கு திரும்பிவிட்டனர்.

பயிற்சியின் முடிவில் தென்னாபிரிக்க அணி பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் நிருபர்களிடம் பேசுகையில், இங்குள்ள விக்கெட துடுப்பாட்டத்திற்கு வசதியாக அமைக்கப் பட்டுள்ளது.

300 ரன்களுக்கும் அதிகமாக எடுத்து பாதுகாப்பான நிலையை ஏற்படுத்திக்கொள்வதே நல்லது. இது பகல் - இரவு ஆட்டமாக இருப்பதால் இரவில் பனி எப்படி இருக்கிறது என்பதை பார்த்து அதற்கேற்ப வியூகம் அமைத்துக்கொள்வோம். பெங்களூர் போட்டியில் பெற்ற தோல்வியை கருத்தில்கொண்டு எங்கள் வீரர்கள் நன்றாக விளையாடி இதில் வெற்றி பெறுவார்கள் என்று நம்புகிறேன். செனனை ஆடுகளத்தில் முன்னதாக ஆடப்பட்டுள்ள போட்டிகள பற்றி ஆராய்ந்து வருகிறோம் என்று கூறினார். (த)

**விளையாட்டு செய்திகள்**



கோவையில் நடந்த மனவளர்ச்சி குன்றியோருக்கான ஸ்பெஷல் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற்ற சேலத்து தங்கங்கள்.

# ஷாங்காய் டென்னிஸ் இரட்டையரில் பிரான்ஸ் ஜோடிக்கு சம்பியன்

## லியாண்டர் - ஜிமோன்ஜிக் போராடி தோல்வி

ஷாங்காய் ஏ.டி.பி. டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவில் பிரான்ஸ் நாட்டைச சேர்ந்த மைக்கேல் லோத்ரா மற்றும் பேப்ரிஸ் சாந்தோரா ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

இந்த இறுதிப்போட்டியில் இந்தியாவின லியாண்டர் பயஸ் - செர்பியாவின் நெனாட் ஜிமான்ஜிக் ஜோடி போராடி தோல்வி அடைந்தது.

இந்தச் சீசனின் கடைசி ஏ.டி.பி. டென்னிஸ் மாஸ்டர் போட்டிகள் சீனாவில் உள்ள ஷாங்காய் நகால் நடந்து வருகிறது.

ஷாங்காய நகரில் உள்ள கியூ ஜோங் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரட்டையர் இறுதிப் போட்டி நடந்தது.

இதில் பட்டத்தைக் கைப்பற்ற லியாணடர் -ஜிமோன்ஜிக் ஜோடியும், லோத்ரா - சாந்தோரோ ஜோடியும் பலப்பரீட்சை நடத்தினா.

மிகவும் பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும் நடந்த இந்த இறுதிப் போட்டியில் பிரான்சின் மைக்கேல் லோத்ரா - பேர்ரிஸ் சாந்தோரோ ஜோடி கடும் போராட்டத்திற்குப் பிறகு 6-7 (8/6), 6-3, 7-6 (7/4) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

சுமார் 2 மணிநேரம் 36 நிமிடங்கள் நடந்த இந்த இறுதிப்போட்டியில் 5ஆம் நிலை ஜோடியான லியாண்டர் ஜிமோன்ஜிக் ஜோடி போராடி தோல்வி அடைந்தது.

இதில் பட்டம் வென்றதன் மூலம், இங்கு பட்டம் வென்ற முதலாவது பிரான்ஸ் நாட்டு ஜோடி என்ற பெருமையை லோத்ரா - சாநதோரோ ஜோடி பெற்றுள்ளது.

தவிர, இந்தப் பட்டம் இந்த வருடம் பிரான்ஸ் நாட்டு ஜோடி பெறும் 4ஆவது படடமாகும். இதற்கு முன்பு ரோம் மற்றும உள்நாட்டில் நடந்த மெட்ஸ் மற்றும லியான் ஆகிய பட்டங்களை இந்த ஜோடி வென்றது.

பயசும், ஜிமோன்ஜிக்கும் இணைந்து பங்கேற்ற முதலாவது ஷாங்காய் போட்டி இதுவாகும். தவிர இருவரும் இணைந்து பங்கேற்ற கடைசி போட்டியும இதுதான.

சாந்தோரோவும், ஜிமோன்ஜிக்கும் அடுத்த சீசனில் வேறு வேறு பார்ட்னர்களுடன் இணைந்து ஆட இருக்கின்றனா. லோத்ரா ஒற்றையர் பிரிவில் கவனம் செலுத்தவிருக்கிறார்.

2006ஆம் ஆண்டு செக் குடியரசு வீரரான மார்டின் டாமுடன் இணைந்து இரட்டையர் பிரிவில் பங்கேற்க லியாண்டர் பயஸ் முடிவு செய்திருக்கிறார்.

பயஸ் பங்கேற்ற 4ஆவது வருட கடைசப் போட்டி இதுவாகும். இதற்கு முன்பு மகேஷ் பூபதியுடன் இணைந்து 3 இறுதிப்போட்டிகளில் பங்கேற்றார்.

ஆனால் லியாண்டர் பயஸ் இதுவரை மாஸ்டர்ஸ் கோப்பை போட்டிகளில் பட்டம் வென்றது கிடையாது என்பது நினைவு கூறத்தக்கது.

இப்போட்டியின் மூலம் இந்திய - செர்பிய ஜோடி 3ஆவது முறையாக பட்டம் வெல்ல முயற்சித்தது. ஆனால் அவர்கள் கனவு ஈடேற முடியாமல் போனது.

இதற்கு முன்பு இந்திய - செர்பிய ஜோடி, பார்சிலோனா மற்றும் மாண்டே கார்லோ மாஸ்டர்ஸ் தொடர் ஆகியவற்றில் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது. (த)



டெல்லி வந்துள்ள இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் வீராங்கனைகளும், இந்திய அணி வீராங்கனைகளும் காங்கிரஸ்தலைவி சோனியாவைச் சந்தித்து உரையாடினர்.

# டோக்கியோ மராத்தான் போட்டி ஜப்பான் வீராங்கனை சம்பியன்

டோக்கியோவில் நடைபெற்ற மகளிர் மராத்தான் போட்டியில் ஜப்பான் வீராங்கனை நவாகோ டகாகாஷி சம்பியன் பட்டத்தை வென்றார்.

கடந்தவாரம் காயமடைந்த தனது வலது காலில் வலி இருப்பதாக டகாகாஷி கூறியிருந்தார்.

இருந்தபோதிலும், அவர் 2 மணிநேரம் 24 நிமிடம் 39 விநாடிகளில் இந்த தூரத்தைக் கடந்து முதலிடம் பிடித்தார்.

இப்போட்டியில் லிதுவேனியா வீராங்கனை ஜிலே[illegible] பலகியுனேடே இரண்டாவது இட[illegible]தயும், எத்தியோப்பிய வீராங்கனை [illegible]ல்பனேஷ் அலேமு மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

2003ஆம் ஆண்டு டோக்கியோ மராத்தான் போட்டியில், அலேமு முதலிடம் பிடித்தார். அதில் டகாகாஷி 2 ஆவது இடம் பிடித்தார்.

அந்த மராத்தான் போட்டி, ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு ஜப்பான் நடத்திய சோதனைப் போட்டியாக இருந்தது. அதன பிறகு டகாகாஷி பங்கேற்ற முதல் முழு மராத்தான் போட்டி இதுவாகும்.

அப்போது தெளிவான தேர்வு நிலை கடைப்பிடிக்கப்படாத சூழ்நிலையில் இரணடாவது இடம்பிடித்த தனக்கு ஒலிம்பிக் டிக்கெட் கிடைக்கும் என்ற டகாகாஷி எதிர்பார்த்தார்.

ஆனால் ஜப்பான் தடகள அதிகாரிகள ஒலிம்பிக் போட்டிக்கு டகாகாஷியை நிராகரித்தனர். மற்றொரு ஏதென்ஸ் மராத்தானில தங்கம் வெற்றார்.

காயம் காரணமாக இரண்டு வருடகாலம போட்டிகளில் பங்கேற்காத டகாகாஷி இந்தப் போட்டியில் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது. இவர் சிட்னி ஒலிம்பிக் சம்பியனானவர்.

இப்போட்டியில் வென்றதன் மூலம், 2008ஆம் ஆண்டு பெய்ஜிங் ஒலிம்பிக் போடடிக்கு தான் தயார் என்பதை, தனது எதிரிகளுக்கு உணர்த்தியிருக்கிறார் டகாகாஷி.

2003ஆம் ஆண்டு போட்டியின்போது, கடைசி 6 கிலோமீற்றர் தூரத்தில் ஒரு மேடு வந்தபோது, டகாகாஷி திணறி பின் தங்கி, இறுதியில் 2ஆவது இடம்பிடித்தார்.

இதனால் கடந்த வருட ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பை டகாகாஷி இழந்தது நினைவு கூறத்தக்கது.

சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள உயரமான மலைப்பகுதியான போல்டரில், ராக்கி மவுண்டன் தங்கும் விடுதி அருகே பயிற்சி செய்தார்.

ஆனால் அடுத்தடுத்த காயங்களினால் அவர் மீண்டும் போட்டியில் பங்கேற்பது தடைபட்டது. கடந்த வருடம் செப்டம்பர் மாதம் பயிற்சின்போது, அவருக்கு வலது கணுக் காலில் காயம் ஏற்பட்டது.

இது குறித்து அவரிடம் கேட்டபோது, ஓட்டப்போட்டிகளில் பங்கேற்பதை விட்டுவிடலாமா என்று கூட நான் ஒருமுறை நினைத்தேன். நான் மீண்டும் இந்தப் போட்டியில் கலந்துகொண்டது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்று போட்டி நடந்த தேசிய அரங்கத்தில் கூடியிருந்த ரசிகர்கள் மத்தியில் அவர் தெரிவித்தார். (த)

# இந்திய - தென்னாபிரிக்க அணிகளின் 3வது ஒருநாள் போட்டி இன்று

## பொலிஸ் பாதுகாப்பு தீவிரம்

சென்னையில் இன்று நடைபெறும் இந்திய - தென்னாபிரிக்கா அணிகள் மோதும் கிரிக்கெட் போட்டிக்கு 5 ஆயிரம் பொலிஸா பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகிறாாகள்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இன்று இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதும் மூன்றாவது ஒரு நாள் போட்டி சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் மைதானத்தில் பகல் - இரவு ஆட்டமாக நடைபெறுகிறது. இந்தப் போடடி பகல் 2.30 மணிக்கு தொடங்குகிறது.

போட்டியையொட்டி மைதானத்தைச் சுற்றி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மைதானத்தின் நடு மத்தியில் உள்ள பிட்சுக்கு துப்பாக்கி ஏந்திய பொலிஸார் 2 பேர் நிறுத்தப்பட்டுள்ளனர். பாதுகாப்பு பணியில் 5 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். பல கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.


போட்டியைக் காண வரும் ரசிகர்கள் தீவிர சோதனைக்குப் பின்னர் தான் மைதானத்தில் அனுமதிக்கப்படுவார்கள். ரசிகர்கள் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பொருட்கள் எதையும் கொண்டு வரக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். செல்போன், கமரா தண்ணீர் போத்தல்கள், பீடி, சிகரெட், தீப்பெட்டி, கொடி ஆகியவை கொண்டு செல்லக்கூடாது.

போலி டிக்கெட் விற்பவர்களைக் கண்காணிக்க தனிபபடை அமைக்கப்பட்டுளளது. அதேபோல மைதானத்தில் பெண்களை கேலி - கிண்டல் செய்வது மற்றும் அநாகரிகமாக நடந்து கொள்பவர்களையும பொலிஸார் கைது செய்யவுள்ளனர். (த)



சீனத் தலைநகர் பீஜிங்கில் சைக்கிள் பந்தயத்துக்கான பயிற்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சீன வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுடன் ஆர்வமாகக் கலந்துகொண்டார் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்.

# ஈராக்கிலிருந்து அமெ. படைகள் வாபஸ் பெறமாட்டாது - புஷ்



(வாஷிங்டன்)


ஈராக் நாட்டில் தீவிரவாதிகள் ஒழித்துக்கட்டப்படும் வரை அந்நாட்டில் இருந்து அமெரிக்கப்படைகள் வாபஸ பெறப்படமாட்டாது என்றும் அமெரிக்கப்படையினர் தொடர்ந்து போராடுவார்கள் என்றும் அந்நாட்டின் அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாக ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. இந்தப்போர் முடிவுக்கு வந்த போது சதாம் உசேன் தப்பியோடி மறைந்தார். பிறகு சில மாதங்களுக்குப்பின் அவர் அமெரிக்கப்படையினரால் பிடிபட்டார். அவரிடம் விசாரணை நடந்துவருகிறது. ஈராக் நாட்டின் மீது அமெரிக்க போர் தொடுத்து வெற்றிபெற்ற பிறகும்கூட அமெரிக்கப்படை அங்கிருந்து வாபஸ் பெறவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த சதாம் உசேன் ஆதரவு தீவிரவாதிகள் அங்கு தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறர்கள். அமெரிக்கப்படை வெளியேற வேண்டும் எனறு வலியுறுத்தி இவர்கள் கொடும் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஈராக்கில் தினமும் கார்க்குண்டு வெடித்துக்கொண்டே இருக்கிறது. இந்தக்கார்க் குண்டு வெடிப்பில் அன்றாடம் பலர் மடிந்துகொண்டே இருக்கிறர்கள். பாக்தாத் நகரம் குண்டு வெடிப்பு நகரமாக மாறிப்போனது. இதில் அப்பாவிகள் பலர் கொல்லப்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் அமெரிக்கப்படை அங்கிருந்து வெளியேறாது என்று அமெரிக்க அதிபர் புஷ் திட்டவட்டமாக கூறிவிட்டார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், ஈராக்கில் தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டுவோம். அதுவரை எங்கள் வீரர்கள் தொடர்நது போராடுவார்கள். தீவிரவாதம் ஒழிக்கப்படும்வரை அமெரிக்கப்படைகள் ஈராக் நாட்டிலிருந்து வாபஸ் ஆகாது என்று திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார் ஜோர்ஜ் புஷ். (த)



துபாயில் 5 நாள் விமான கண்காட்சி நேற்றுமுன்தினம் தொடங்கியது. தொடக்க விழாவில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த விமானங்களை ஐக்கிய அரபுக் குடியரசு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் பார்வையிடுகின்றனர்.

# அப்ரூவராக மாறமாட்டேன் - அபுசலீம் வாக்குமூலம்

(மும்பை)

முப்பை தொடர்குண்டு வெடிப்பு குற்றவாளியான அபுசலீம் மற்றும் அவனது மனைவியான நடிகை மோனிகா பேடியை சி.பி.ஐ அதிகாரிகள் போர்த்துக்கல் நாட்டில் இருந்து வரவழைத்து விசாரித்து வருகிறார்கள். அபுசலீடம் நடந்து வரும் விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தபடி உள்ளன.

இதன் அடிப்படையில் பிரபலங்கள் சிலரிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

இதற்கிடையே ஐதராபாத் கோட்டில் ஆஜர் செய்யப்பட்ட நடிகை மோனிகா பேடி, அபுசலீமுக்கும் எனக்கும் திருமணம் நடக்கவில்லை. நான் திருமணம் ஆகாதவள் என்று தெரிவித்தார்.

தனக்கு திருமணம் நடக்கவில்லை என்று மோனிகா பேடி கூறி இருப்பது அபுசலீமை கடும் கோபத்துக் குள்ளாக்கி, இருக்கிறது. சி.ஜ.பி.அதிகாரிகள் விசாரணை நடத்திய போது எனக்கு 2 தடவை திருமணம் நடந்துள்ளது. மோனிக்காவை நான் 2 ஆவதாக திருமணம் செய்து கொண்டேன். அவள் என் மனைவிதான் என்றான். அபுசலீம் மேலும் கூறுகையில், மோனிகா பேடியை நான் கடந்த 2000ஆம் ஆண்டு அமெரிக்காவில் லொஸ் ஏஞ்ச்ல்ஸ் நகரில் இஸ்லாமிய மதகுரு முன்னிலையில் திருமணம் செய்து கொண்டேன் இஸ்லாமிய முறைப்படி எங்களது திருமணம் நடந்தது என்றான்.

இதற்கிடையே போர்த்துக்கல் நாட்டு குடியுரிமை பெற அந்த நாட்டு பெண் ஒருவரை அபுசலீம் திருமணம் செய்தது விசாரணையில் தெரியவந்துள்ளது, அந்த பெண் பற்றிய விபரங்களை கேட்ட போது அபுசலீம் எதையும் சொல்ல மறுத்து விட்டான். மோனிகா பேடி தனக்கு திருமணம் நடக்கவில்லை என்று சொல்கிறாரோ என்ற தகவலை சி.பி.ஐஅதிகாரிகள் அபுசலீமிடம் சொன்ன போது அவன் கண்ணீர் விட்டு அழுதான். மோனிகா பேடி மீது அளவு கடந்த பாசம் வைத்து இருப்பதாக கூறினான்.

மோனிகா பேடியின் வாக்குமூலம் காரணமாக சி.பி.ஐ அதிகாரிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அவரை அபுசலீமிடம் இருந்து தனிமைப்படுத்தி மேலும் பல தகவல்களை பெற முடியும் என்று நம்புகின்றனர். அதோடு அபுசலீமுக்கு எதிராக மோனிகாவை அப்ரூவர் ஆக்கும் முயற்சியும் நடந்து வருகிறது.

மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் அபுசலீம் அப்ரூவர் ஆகலாம் என்று சமீபத்தில் தகவல்கள் வெளியானது. இது பற்றி அபுசலீமின் வக்கீல்கள் கூறியதாவது,

மும்பை குண்டு வெடிப்பு தொடர்பாக எல்லா தகவல்களையும் ஊடகங்களுக்கு விட்டு விடவே அபுசலீம் விரும்புகின்றான். இதில் அவன் அப்ரூவர் ஆக விரும்பவில்லை. அத்தகைய எண்ணம் அவனிடம் இல்லை.

அவன் எங்களிடம் பேசுகையில் எனக்கும் மும்பை குண்டு வெடிப்புக்கும் எந்த தொடர்பும் இல்லை. அதற்கு நான் எந்த வகையிலும் உதவிகள் செய்யவில்லை. பிறகு எப்படி நான் அப்ரூவர் ஆக முடியும என்றான். எனவே அபுசலீம் அப்ரூவர் ஆக மாட்டான் எனத் தெரிவித்தார். (த)

# வான் - லொறி நேருக்கு நேர் மோதி 5 பெண்கள் உடல் நசுங்கிப் பலி

(கோவை)

கோவை அருகே வான் - லொறி நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் 5 பெண்கள் உடல்நசுங்கிப் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பல்லடத்தில் இருந்து 3கி.மீ தூரத்தில உள்ள மாதப்பூர் அருகே வான் சென்று கொண்டிருந்த போது கரூரில் இருந்து மணல் பாரம் ஏற்றிக்கொண்டு வந்த லொறி ஒனறு வான் மீது கண் இமைக்கும் நேரத்தில மோதியது. இதில் வான் அப்பளம போல் நொறுங்கியது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே மாகாளி (வயது -60), நாச்சம்மாள (வயது -48), பொன்னம்மாள் (வயது- 60), பழனாள் (வயது -60), பொன்னி (வயது -40) ஆகிய ஐந்து பெண்கள் உடல் நசுங்கி பரிதாபமாக இறந்தனர்.

இந்த விபத்தில் பெரிய கருப்பன் (வயது -60), குணசேகரன் (வயது-35), கண்ணன் (வயது -43) ஆகிய மூன்று பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். தகவல் அறிந்து தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். (த)

WORLD NEWS உலக தரிசனம்

# இந்தியர் உட்பட நால்வர் தீவிரவாதிகளால் கடத்தல்

(ஆப்கானிஸ்தான்)

ஆப்கானிஸ்தானில் சாலை சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த இந்தியர் உடபட 4 பேரை தலிபான் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கக் கூட்டுப படையினர் போர் தொடுத்து தலிபான் தீவிரவாதிகளை விரட்டி அடித்தனர். தலிபான் இயக்கத் தலைவரும் உலக தீவிரவாதத்தின் ஆணிவேராக செயல்பட்டுவருபவருமான ஒசாமாபின்லேடனும் தலைமறைவு வாழ்க்கை நடத்தி வரும் இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அமெரிக்கக் கூட்டுப்படையினரையும், தற்போதைய அரசுக்கெதிராகவும் அவ்வப்போது தாக்குதல் நடத்திவருகின்றனர்.

ஆப்கானிஸ்தான் எல்லைச்சாலைகள் மேம்பாட்டு அமைப்பின் சார்பில் சாலைகள சீர் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

இப்பணியில் ஈடுபட்டிருந்த இந்தியாவைச சேர்ந்த கார் டிரைவர் பி.ஆர்.குட்டி மற்றும ஆப்கானிஸ்தானியர்களை தலிபான்கள் கடத்திச் சென்றனர். சட்டவிரோதமாகக் கடத்திச்சென்ற நான்கு பேரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென்று நிமால் மாநிலக் கவர்னர் கலாம் தாஸ்தாகீர் கூறியுள்ளார். (த)



சேலத்தில் நடந்த கண்காட்சியில் இடம்பெற்ற 2500 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த நாணயங்கள்.

# அமெரிக்காவிடமிருந்து சீனாவுக்கு விமானங்கள்

(பெய்ஜிங்)

அமெரிக்காவிடமிருந்து 70 போயிங் விமானங்களை வாங்க சீனா உடன்பாடு செய்து கொண்டுள்ளது,

இவற்றின் மதிப்பு சுமார் ரூ.20 ஆயிரம் கோடியாகும்.

சீனாவின் விமான ஏற்றுமதி இறக்குமதி நிறுவனமும் அமெரிக்காவின் போயிங் நிறுவனமும் இதற்கான உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளன.

2006-08 ஆண்டுகளுக்கு இடையில் இந்த விமானங்களை சீனாவுக்கு அமெரிக்கா சப்ளை செய்யும்.

இதேபோன்ற மேலும் 80 விமானங்களை வாங்கவும் உடன்பாடு எட்டப்படவுள்ளது. இவை 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் சீனாவுக்கு சப்ளை செய்யப்படும். (த)

தென்கொரிய தலைநகர் சியோலில் அரசுக்கு எதிராக பிரமாண்டமான பேரணி நடந்தது. தற்காலிகத் தொழிலாளர் முறையை நீக்கக் கோரி நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்பேரணியில் 12 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.



சிலர் தன்னிடம் உதவிபெற்றவர்களை தன் கடனாளிகளாகக் கருதுகிறார்கள். தாம் செய்துள்ள உபகாரத்தை அவர்கள் மறப்பதே இல்லை!

- மார்க்கஸ்

வலம்புரி

# ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் இந்திய ஆதிக்கம் மேலோங்கும்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் அமெரிக்காவின் தலையீடு அதிகரிக்கும் என்ற ஆரூடம் ஏற்கனவே அரசியல் களத்தில் பரவலாகப் பேசப்பட்டு இருந்தது.

இவ்விதம் பேசப்படுவதற்கு ரணில் விக்கிரம பிரதமராக இருந்த காலத்தில் அமெரிக்காவுடன் வைத்துக்கொண்ட உறவுகள் காரணமாகின.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோல்விகண்டதன் காரணமாக "அமெரிக்கத் தலையீடு" என்ற பேச்சு செயலிழந்துபோனது.

இப்போது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷவின் போக்கு எவ்வாறு இருக்குமென்பது அரசியலில் அலசப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். 24 வயதில் பாராளுமன்றத்திற்குச் சென்றவர். அவருக்கு இப்போது 60 வயது எனில் அரசியல் அனுபவத்திற்கு 36 வருட பாராளுமன்ற அனுபவம் உண்டு. இந்த விடயங்களை அவர் தனது பதவியேற்பிற்குப் பின்னரான உரையில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஏற்கனவே நன்கு திட்டமிட்டிருந்த மகிந்தவின் பதவியேற்பு உரை முன்னைய ஜனாதிபதிகளின் உரைகளைவிட நிதானமானதும் தெளிவானதும் என்பதை இங்கு குறிப்பிடாக வேண்டும்.

தனது நடுத்தரக் குடும்பத்தின் பின்னணியை அரசியலுடன் தொடுத்த மகிந்த, ஏழ்மைபற்றி தனக்கு நன்கு தெரியுமெனக் குறிப்பிட்டமை தேர்தல் பிரசாரத்துக்குப் பிந்திய பிரசாரமாக இருந்தது.

அத்துடன் நான் ஓர் ஆசியன். ஆசியாவின் வளர்ச்சிக்கு எனது ஒத்துழைப்பு என்றும் இருக்கும் என்றும் மகிந்த தனது உரையில் கூறியிருந்தார். இவ்வாறு கூறியதன் மூலம் இந்தியாவை நோக்கிய சரிவு அவரிடம் இருப்பதை ஊகித்துக்கொள்ளமுடியும்.

இந்தியாவை துணைக்கு அழைத்துக் கொள்வதன்மூலம் ஈழத்தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்கமுடியுமென அவர் எண்ணுகின்றார். அத்துடன் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் நோர்வே அனுசரணையாளராகச் செயற்படுவதில் மகிந்தவுக்கும் ஜே.வி.பிக்கும் உடன்பாடில்லை.

எனவே அனுசரணையாளரான நோர்வேயை விலக்குவதற்கு இந்தியாவைக் கொண்டுவரும் தேவையுண்டு. அதற்காகவும் இந்தியாவை ஆசுவாசப்படுத்துவதில் ஜனாதிபதி மகிந்த ஆர்வமாக இருக்கின்றார்.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் நரித்தந்திரமும், ஆர்.பிரேமதாசாவின் செயற்பாடும் ஒன்றிணைந்த பாத்திரமாக வர்ணிக்கப்படும் மகிந்த இந்தியாவை வரவழைத்து சமாதானப் முயற்சிகளை ஸ்தம்பிக்க வைக்கும் காய்நகர்த்தலில் ஈடுபட்டுள்ளார்.

இதற்கு இந்தியாவும் தாளம்போடும் என்பதால் மகிந்தவின் காலத்தில் இந்திய ஆதிக்கம் இலங்கையில் ஓங்கவே செய்யும்.

# நோர்வேயின் வெளியேற்றத்தை உறுதிசெய்யும் மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகள்

ஜனாதியாகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்கான அனுசரணையாளர் பொறுப்பிலிருந்து நோர்வேயை வெளியேற்றக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் முதல் உரையில், கடந்த காலங்களில் எம்முடன் இணைந்து செயல்பட்ட நட்பு நாடுகளின உதவியுடன் விடுதலைப்புலிகளுடனான இனப்பிரச்சினைக்கு கௌரவமான அமைதியை ஏற்படுத்தவுள்ளதாக அறிவித்திருந்தார்.

ஆனால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட மஹிந்தவின் ஆங்கில உரையில் 'இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள்,சர்வதேச நாடுகள்'இந்த அமைதிப் பணியில் இணைத்துக் கொள்ளப்படும் என்று திருத்தம் செய்திருநதார்.

இருதரப்பு பேச்சுவார்த்தை என்ற முன்னைய அரசாங்கததின் நிலையிலிருந்து மாறி பலதரப்புப் பேச்சுவார்த்தையைத் தாம் முன்னெடுக்க உள்ளதாகவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனால் தமது அமைதி தொடர்பான பேச்சுக்களில நோர்வே குறித்த கருத்துகளை அவர் வெளிப்படுத்தவில்லை. இதனால் இலங்கை அமைதிப் பேச்சுகளில் நோர்வேயின அனுசரணையாளர் பணி குறித்த கேள்வி கொழும்பு அரசியல் வட்டாரத்தில் எழுந்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்ற நிலையில்,யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் இலங்கையில் யுத்த அபாயம் இருப்பதாகவும் இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் எச்சரித்திருந்தார்.

அதேநேரத்தில் தொடர்ந்து அனுசரணையாளர் பணியில் ஈடுபடுவதாகவும் மஹிந்தவுக்கான வாழ்த்துச் செய்தியிலும் தெரிவித்திருந்தார் எரிக் சொல்ஹெய்ம்.ஆனால் கடந்த காலங்களில் நோர்வேயை வெள்ளைப் புலி என்று மிகக் கடுமையாக விமர்சனம் செய்து வந்ததுடன் நோர்வேக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க பேரினவாதக் கட்சிகளின் தயவில் மஹிந்தராஜபக்ஷ ஜனாதிபதியாகி உள்ள சூழ்நிலையில் நோர்வே தொடர்ந்து அனுசரணைப் பணியை மேற்கொள்ள முடியாத நிலையே ஏற்படும் என்றும் கொழும்பு அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவின் தலையீட்டை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் மிகவும் விரும்புவதாகவும் இந்தியாவுக்கு ஒத்துழ்ழக்கக் கூடிய முழு அளவிலான பேரினவாத அரசு இலங்கை அரசில் அமைந்திருப்பது நல்ல வாய்ப்பென்றும் அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் இந்திய அரசாங்கமானது கூட்டணி அரசாங்கமாக, முன்னைய இந்திரா அல்லது ராஜீவ் கால அரசுகளைப் போல் தனிப் பெரும்பான்மை உள்ள அரசாக இல்லை. மேலும் ஈழத் தமிழர்களுக்கு வெளிப்படையான ஆதரவைத் தெரிவிக்கக் கூடிய தமிழ்நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகள்,விடுதலைப் புலிகளை பகிரங்கமாக ஆதரிப்போம் என்று அறிவித்து சிறைக்குச் சென்ற வைகோவின் ம.தி.மு.க.போன்றவை இந்திய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் இந்தியத் தலையீட்டுக்கான உத்தியோகபூர்வமான சாத்தியக்கூறுகள் குறைவு என்றும் புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இருப்பினும் அரசாங்கங்கள் அமைவதும் கவிழ்வதும் ஒருபுறமிருக்க பிராந்திய விடயங்களில் தன்னை வல்லரசாக வெளிப்படுத்துவதற்காக இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் இந்திய புலனாய்வுத் துறையினரது செயற்பாடுகள் முன்னை விட இப்போது இலங்கையில் பகிரங்கமாகவும்,இலங்கை அரசியலை தீர்மானிக்கிற ஒரு சக்தியாகவும் விரிவடைவதற்கான சாத்தியக்கூறுகளை மறுப்பதற்கில்லை என்றும் அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (த)

## வட கிழக்கு மாகாண

# நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கு இடமாற்றம் வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கி வரும் திணைக்களங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் இடமாற்றங்கள் வழங்கப் படவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா அறிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசதுறைகளில் நிரந்தர் நியமனங்களை வழங்கும் திட்டத்தின்கீழ் 3 ஆயிரத்து 55 பட்டதாரிகளுக்கு வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவையில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கும் திட்டத்தினை குறுகியகால அவகாசத்தில பூர்த்திசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதனால் பெரும்பாலான பட்டதாரிகளுக்கு பொருத்தமற்ற சேவை நிலையங்களில் நியமனம் வழங்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையினைக் கருத்திற்கொண்டு பட்டதாரிகளின் தகைமைகளையும் திணைக்களங்களின் தேவைகளையும் அடிபபடையாகக் கொண்டு தற்போதைய சேவை நிலையங்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளதாக பிரதம செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்போது பட்டதாரிகளின் தற்போதைய சேவை நிலையங்கள் தொடர்பாக மாகாண மட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.இதன்போது மனிதாபிமான அடிப்படையில் செய்யப்படும் மேன்முறையீடுகள் உரிய முறையில் பரிசீலிக்கப்படும் என்றும் வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-9)

# அரச ஊழியர்களின் புதிய காப்புறுதித் திட்ட சுற்றறிக்கை

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 2005ஆம் ஆண்டின் வரவு-செலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

12/2005(1)என்ற இலக்கம் கொண்ட சுற்றறிக்கையில ஓர் அரசாங்க ஊழியர் எவ்வாறு அக்ரஹாரா மூலம் நன்மைகளைப் பெறமுடியும் என்று கூறப்பட்டுள்ளது.

ஓர் அரசாங்க ஊழியர் மருத்துவமனையில் அனுமதிககப்பட்டால் அல்லது அவருக்கு திடீர் விபத்து ஒன்று ஏற்படடால் அல்லது அவரை இயற்கை மரணம் தழுவினால ஒரு மாதகாலத்திற்குள் இது சம்பந்தமான சான்றுகளுடன் தங்கள் கடமைபுரியும் திணைக்களத் தலைவர் ஊடாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலும சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, மூக்குக் கண்ணாடிக்கான காப்புறுதி நலன்களைப் பெறும்போது மருத்துவரினால் பரிசோதிக்கப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் மூக்குக்கண்ணாடியை கொள்வனவு செய்த பற்றுச்சீட்டு ஆகிய ஆவணங்களின் மூலப் பிரதிகளை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பித்தல்வேண்டும்.

இதுதவிர மேலும் முக்கியமான நலன் ஒன்றினை அக்ரஹாரா மூலம் அரசாங்க ஊழியர்கள் பெறுகின்றார்கள். அதாவது வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும்போது அம் மருத்துவமனையில் தலைவரால் சான்றுபடுத்தப்பட்ட நோய் நிர்ணயப்பத்திரத்தின் பிரதி சகல பற்றுச்சீடுக்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் அக்காலத்தில் புறமபாகப் பெறப்பட்ட மருந்துகள், பரிசோதனை ஆகியவற்றின் பரிந்துரைகளின் மூலப்பிரதிகளையும் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சகல விதமான ஆவணங்களும் முகாமையாளர், அரச ஊழியர்,காப்புறுதிக்கூட்டுத்தாபனம்,இலங்கை இன்சுரனஸ், இல.21 லோக்சோல் வீதி,கொழும்பு-2என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். இதுதவிர நோயாளர் மருத்துவமனையொன்றில் தங்கியிருந்து சிகிச்சைபெறின் வீட்டுக்கு அழைத்து வருவதற்கு முன்பு 011-2357357,071-2357357,077-2357357,072-2357357 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு கட்டாயம் அறிவிககவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளன.(த-9)


# முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் அங்கு வாழும் மக்கள் பெரும் அவதி

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக சுனாமியால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த இடைத்தங்கல் முகாம்கள் கடும்வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வடமராட்சி கிழக்கு, மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி,வத்திராயன் பகுதிகளில் வாழ்ந்த மக்களே இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.இதனால் இம் மக்கள் பாடசாலைகளில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை தொண்டுநிறுவனங்களும் பொது அமைப்புக்களும் வழங்கவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரியுள்ளனர். இதேவேளை,வடமராட்சி கிழக்கு வத்திராயன பகுதியில் கட்டையடிப் பகுதிக்கான போக்குவரத்து மழை காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-43)

## தினசரி தியானம்
## விவேகச் சிந்தனைகள்



உடல் இறைவனை வணங்க வேண்டும். உதடுகள் இறைவனைத் துதிக்க வேண்டும். உள்ளமெல்லாம் இறைவனே நிறையவேண்டும். இவ்விதம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் ஒன்றிய வழிபாடுதான் முழுமையான வழபாடாகும். அனுபூதி என்பது இடையறாது சிந்தித்து அதை நம்மில் ஒரு பகுதியாகச் செய்து கொள்வதாகும்.

சுவாமி விவேகானந்தர்

# அரசாங்கத்தில் இணைவதற்கு இ.தொ.காங்கிரஸ் தீர்மானம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்பில் இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ் மீண்டும் இணையவுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் வரை அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்பு வகித்த இ.தொ.க தேர்தலில் ரணில் விக்கிரமசிங்காவை ஆத ரித்தது. அமைச்சுப் பொறுப்புக்களில் இருந் தும் வெளியேறினர்.

இந் நிலையில் மலையகத் தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மீண்டும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் முடிவு செய்துள்ளதாக தெரிகின்றது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் கொழும்பில் கூடிய அக்கட்சியின் உயர் நிலைக்கூட்டம் விவாதித்துள்ளது. இருப்பி னும் அமைச்சரவையில் மீண்டும் சேருவது தொடர்பாக மலையக மக்களுடன் ஆலோ சிக் கப்பட்ட பின்னர் அறிவிக்கப்படும் என்று பேச்சாளர் கே.மூர்த்தி கூறியுள்ளார்.

இதே வேளை இ.தொ.கவை மீண்டும் அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (ச)

# இந்திய மீனவர்களின் படகு நேற்று இன்பருட்டியில் கரையொதுங்கியது

(திருநெல்வேலி)

வடமராட்சி இன்பருட்டிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் படகு ஒன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

கடற்கொந்தளிப்புக் காரணமாக தமது படகு திசைமாறி இலங்கை கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

அப்படகில் இருந்த நாகப்பட்டினத்தை சேர்ந்த இரும்பன் தொடாயுதம் (வயது-45) முத்தையா பழனிவேல் (வயது-35) முத்தையா முத்துசாமி (வயது-45) ஆகிய மூவரும் இன் பருட்டி மீனவர்களால் காப்பாற்றப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் இன்பருட்டி கடற் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். காலநிலை சீரா னதும் அவர்கள் பாதுகாப்பாக இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என கடற்றொ ழிலாளர்களின் கூட்டுறவு சங்கத்தினர் தெரி வித்துள்ளனர். (ச-43,52)

# எதிர்வரும் 25 ஆம் திகதிவரை பாராளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இன்று கூடவிருந்த பாராளுமன்றம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

நேற்று பாராளுமன்ற கூட்டத்தொடரில் புதிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் பாராளுமன்ற கட்சித் தலை வர்களின் கூட்டத்தில் புதிய ஜனாதிபதியின் இம் முடிவு அறிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்ற வுள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

இதே வேளை இக்கூட்டத்தில் அவசர கால நிலைமையை மேலும் ஒருமாதத்திற்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை மீது விவா தம் நடத்துவது என இணக்கம் காணப்பட் டுள்ளது.

இவ்விவாதம் 25 ஆம் திகதி நண்பகல் 12.30 முதல் 4.30 மணிவரை நடைபெறும் என பிரதமர் தெரிவித்தார். (ச-4)

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க முன் புலிகளின் ஆயுதம் களைய வேண்டும்

## சுனந்த தேசப்பிரிய கருத்து

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதனால் அவர்களிடம் இருக்கும் ஆயுதங்களை புதிய ஜனாதிபதி களையவேண்டியிருக்கும் என்று சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி தெரிவின் பின்னர் சமா தானப் பேச்சுவார்த்தைக்கான சாத்தியப் பாடு குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

சமாதான முயற்சிகள் குறித்து புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய தேர்தல் வாக்கு அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்ப தனால் எதிர்வரும் மூன்று மாத காலப்பகு திக்குள் விடுதலைப்புலிகள் வசமிருக்கும் ஆயுதங்களை அவர் களைய வேண்டியி ருக்கும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக அவருக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயு தங்களைக்களைய வேண்டிய நிர்ப்பந்த நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கின்றது. (ச-4)

# மழையால் பாதிக்கப்பட்ட மக்களைப் பதியக் கோரிக்கை

(சாவகச்சேரி)

கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு உட் பட்ட மக்களை தமது பாதிப்புக்கள் குறித்து பதிவு செய்யுமாறு தென்மராட்சி பிரதேச செயலகர் எஸ்.ஸ்ரீனிவாசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது கிராம சேவையாளரிடம் சென்று பாதிப்புக்கள் குறித்த விபரங்களை சமர்ப்பிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (ச-108,8)

# படகுச் சேவை

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு பகுதி ஊடான போக்கு வரத்திற்கு இன்று படகு சேவை ஆரம்பிக் கப்படவுள்ளது.

வடமராட்சி தெற்கு கரையோரப்பகுதி வீதி கடந்த மூன்று மாதங்களாக புனரமைக் கப்படாமையினாலேயே இந்நிலை ஏற்பட் டுள்ளது. இப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழைகாரணமாக அங்குள்ள ஆறு பெருக்கெடுத்து வெள்ளம் தேங்கி நிற் கின்றது இதனாலேயே படகு சேவை நடத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-23)

# யுவதியின் சடலம் அடையாளம் காணப்படவில்லை

(துன்னாலை)

குடத்தனைப் பகுதியில் பழுதடைந்த கட்டடம் ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்ட யுவதியின் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

சடலத்தை எவரும் அடையாளம் காட் டாத நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்குமாறு பருத்தித் துறை நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டு டுள்ளார்.

சடலத்தை நேற்று பார்வையிட்ட நீதிவான் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் அடையாளம் காணும் பொருட்டு சடலத்தை ஐந்து நாட்கள் அங்கு வைத்திருக்குமாறும் உத்தரவிட்டார். (ச-101,43,52)

# இளைஞர்கள் இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அடையாள அட்டை வைத்திருந்ததாக இரண்டு மலை யகத் தமிழ் இளைஞர்கள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை லிந்துல பொலிஸ் வீதித் தடையில் கைது செய்யப்பட் டுள்ளனர்.

அக்கறைப்பத்தனை - தலவாக்கல்லை வீதியில் இரு இளைஞர்கள் பயணம் செய்து கொண்டிருந்த போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பழனியாண்டி கிருஷ்ணராஜ் மற்றும் பொன்னையா ஜெகதீஸ்வரன் ஆகிய இரு இளைஞர்களுமே கைது செய்யப்பட்டதாக லிந்துல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# அரசுடன் இணைவது குறித்து பரிசீலிக்கப்படும் - ஜே.வி.பி

(கொழும்பு)

ஜனாதிபதி ராஜபக்ஷவின் செயற்பாடுகளை அவதானித்த பின்னரே அரசாங்கத்துடன் இணைவது குறித்து ஆராயப்படும் என ஜே.வி.பி அறிவித்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி தொடர்ந்தும் எதிர்க்கட்சி வரிசையிலேயே அமர்ந்திருக்கும். நாம் மகிந்த ராஜபக்ஷவுடன் உடன்படிக்கை செய்து கொண்டது உண்மைதான். ஆனால் அது ஒரு கடதாசியுடன் மட்டுப்படுத்தப்பட்ட தொன்று. அவரின் செயற்பாடுகள் எவ்விதம் அமையப்போகின்றன. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அவர் எவ்வாறு செயற்பட போகின்றார் என்பதைக் குறித்து அவதா னிக்க வேண்டியுள்ளதாக அவர் கூறினார்.

சுனாமி புனர்வாழ்வு விடயம் முற்றிலும் அரசாங்கத்தினதாக இருத்தல் வேண்டும் எனக்கூறியே நாம் அரசில் இருந்து வெளி யேறினோம். புதிய ஜனாதிபதியின் கீழும் அது உறுதிப்படுத்தப்படுகின்றதா என்பதை நாம் உறுதிசெய்ய வேண்டும்.

ராஜபக்ஷவுடன் செய்து கொண்ட உடன் பாடு செயற்படுத்தப்படுவதை நாம் காண வேண்டும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித் தார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்தல் , புலிகளுடன் மட்டுமல்லாது சகல தரப்பினருடனும் பேச்சுக்கள் நடத்துதல், சமாதான செயற்பாடுகளில் நோர்வே யின் பங்கினை மீளாய்வு செய்தல் என்பன ராஜ பக்ஷவுடன் ஜே.வி.பி செய்து கொண்ட உடன் பாட்டின் முக்கிய அம்சங்களாகும் என அவர் தெரிவித்தார். (ச-6)

# புதிய அமைச்சரவை...

தெரிவித்துள்ளன.

இப்புதிய அமைச்சரவையில் பங்கேற்பதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு சிறிது காலம் தாமதமாகும் என ஜே.வி.பி புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளது. (ச-4)

# கடற்படையினருடன்...

இணைந்து தேடுதல் மேற்கொள்ள ப்பட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிரு ந்தது. மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியே ற வில்லை.

இதே வேளை கடற்படையினரின் இந்த நடவடிக்கை குறித்து போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினரிடம் முறையிட்ட போதும் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என நெடுந்தீவு பொது அமைப்புக்கள் குற்றச்சாட்டியுள்ளன .

கடற்படையினரின் தேடுதல் நடவடிக்கை காரணமாக நெடுந்தீவிற்கும் குறிகட்டுவானுக்கும் இடையிலான போக்குவரத்து இடை நிறுத்தப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து யாழ்.மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் , தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் என்பன தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளன. (ச)

# ரட்ணசிறி விக்கிரமநாயக்க...

1962ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக இணைந்து கொண்டார். 1965 ஆம் ஆண்டு களுத்துறை மாவட்டம் ஹொரனை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஆனார்.

பின்னர் 1977 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் ஆனார். 1994 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது இவர் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் பெருந்தோட்ட அமைச் சராக பதவி வகித்தார் .

1999 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி வரை நாட் டின் பிரதமராக பதவிவகித்தார். இவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கடந்த அமைச் சரவையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக வும்புத்தசாசன அமைச்சராகவும் பதவிவகித் தார்.

சிறிது காலம் எதிர்க்கட்சி தலைவராகவும் சபை முதல்வராகவும் கடமையாற்றினார். இதேவேளை பிரதமர் பதவிக்கு அநுரா பண் டாரநாயக்காவை நியமிப்பது என்று சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு முடிவு செய்திருந்தது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவுக்கும் சந்திரிகாவுக்கும் மற்றும் அநுராபண்டாரநாய க்காவுக்கும் இடையிலான முரண்பாட்டையடுத்து பண்டா குடும்பத்தின் கடைசி அரசியல் வாரிசான அநுராவுக்கு பிரதமர் பதவியை அளிக்காமல் ஜனாதிபதி மகிந்த ஒதுக்கி வைத்துள்ளதாக அரசியில் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (ச-4 ,7,8)

ரூபா 5
ஐந்து ரூபாவுக்கு
என்ன வாங்கலாம்
விரைவில்..........
(9979)

மனோகரா யாழ்.
யாழ். நகரில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்


விஜய் + அசின்
கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30(பு.நே)
சில தினங்கள் மட்டும் காலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

ராஜா சினிமா
இந்தியாவிலும் யாழ்ப்பாணம் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஷ், பிரியாமணி மற்றும் பலர் நடித்த
பாலுமகேந்திராவின் கதை, வசனத்தில்
இளையராஜா வின் இசையில்
அது ஒரு கனாக்காலம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சிவாஜி, ரஜனி, ஜெய்சங்கர், அம்பிகா நடிக்க

படிக்காதவன்
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.